Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 18 [02-07-93] வெள்ளிக்கிழமை ஓசை 134

பூமியின் சுழற்சி வேகம் குறைகிறது

### அணுசக்தி கடிகாரம் ஒரு செக்கனால் தாமதம்

பூமியின் சுழற்சி வேகம் குறைவடைவதால் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் புதுடில்லியில் உள்ள தேசிய பௌதிக ஆய்வுகூட விஞ்ஞானிகள் தமது அணுசக்தியில் இயங்கும் கடிகாரத்தை ஒரு செக்கனுக்கு தாமதிக்க வைத்துள்ளனர். ஈர்ப்பு, மற்றும் உராய்வு சக்திகளினால் பூமியின் சுழற்சி வேகம் குறைவடைவதாக இந் நிறுவன விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நாளாந்த வேளையில் லீப் செக்கன் திருத்தம் அவசிய (10 ஆம் பக்கம் பார்க்க)

[ போர் கைதிகள் விவகாரம் ]

# பாராளுமன்றம் கொண்டுவர எதிர்க்கட்சிகள் தீர்மானம்

## ஆறாம் திகதி சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் வசம் தொடர்ந்து இருந்துவரும் போர்க்கைதிகள் தொடர்பான பிரச்சினையையும் இவர்களை விடுவிக்கும் முயற்சியில் அரசு தவறியமை குறித்தும் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள எதிர்க்கட்சிகள் முடிவுசெய்துள்ளன எதிர்வரும் 6ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது இப்பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்போவதாக எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இதனிடையே கைதிகள் விடுவிப்பு தொடர்பாக அரசின் சரியான அணுகுமுறையின்மையால் மீண்டும் விடுதலைப்புலிகள் அரசினை ஏமாற்றியுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஐக்கிய சோஷலிச முன்னணி ஆகியவை அரசை கண்டித்துள்ளன.

அரசு ஒருசில தனிப்பட்டவர்களில் தங்கியிருக்காமல் பொறுப்பானவிதத்தில் விடயங்களை கையாளவேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். 1990இலும் இவ்வாறுதான் புலிகள் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவை ஏமாற்றி அவரின் முதுகில் சவாரிசெய்தனர். அவர்மூலம் தம்மை பாதுகாத்துக்கொண்டு அரச துருப்புக்ளையே தாக்கினர் என ஓ (10 ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை வந்து திரும்பிய

# றுகுணு கப்பல் விவகாரம்; அதிகாரிகளிடையே மோதல்

[யாழ்ப்பாணம்]

தடை செய்யப்பட்ட பொருள்களுடன் பருத்தித்துறைக்கு வந்து திரும்பிய "றுகுணு" கப்பல் தொடர்பாக சிறிலங்கா உயர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், அரசாங்க உயர் அதிகாரிகளுக்கும் இடையே பலத்த கருத்து மோதல் இடம் பெற்றுள்ளது தெரியவருகிறது

ஏதோ ஒரு பகுதியில் தவறு நடைபெற்றுள்ளதால் தான் இந்த நிலை ஏற்பட்டதாக அத்தியாவசிய சேவையாணையாளர் தெரிவித்ததை தொடர்ந்து இந்த மோதல் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஒவ்வொரு அதிகாரியும் தன் மீது தவறு இல்லை என்று மற்றைய அதிகாரி மீது தன் தவறை திணிக்க முற்பட்டு வருவதாகவும் இதனால் அத்தியாவசிய சேவைகள் பிரிவு உயர் அதிகாரிகளுக்கும், கூட்டுப்படை அதிகாரிகளுக்கும், கப்பல் கம்பனி அதிகாரிகளுக்கும் இடையிலும் மற்றும் கப்பல் கப்டன் காங்கேசன்துறை கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் இடையேயும் இக்கருத்துமோதல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது என மேலும் தெரிய வருகின்றது.

றுகுணு கப்பல் கம்பனி தற்போதையபயணத்திற்கான தனது வாடகையையும், பிரயாண செலவையும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் கேட்டிருப்பதாக இச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (க, நி)

## அரசின் உத்தரவிற்காக றுகுணு காத்துள்ளது

யாழ்ப்பாணத்திற்கு அடுத்த வாரம் 3200 மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கப்பல்மூலம் அனுப்பப்படும் என கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் நேற்று அறிவித்தார்.

இதேவேளை காங்கேசன் துறைக்குத் திசைதிருப்பப்பட்டுள்ள றுகுணு கப்பல் அரசாங்கத்தின் அடுத்தஉத்தரவிற்காக காத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ஒலிப்பதிவு நாடா இன்று வெளியீடு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய 'கரும்புலிகள்' பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது. விடுத (10 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியை பரீட்சித்த மாணவன் கோரப்பலி

(நமது நிருபர்)

கரையோரமாக கண்டெடுத்த மிதிவெடியை அமுக்கிப் பார்த்த பாடசாலை மாணவன் ஒருவன் உடல் சிதறிப் பலியானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்த கோரச் சம்பவம் ஒன்று நேற்று மாலை 4 மணியளவில் தாளையடி உடுத்துறையில் நிகழ்ந்தது.

இருவர் படுகாயம்

மேற்படி சம்பவம் பற்றித் (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயர் கெனத்துடன் ஜனாதிபதி பேச்சு

அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னான்டோவை ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியதாக தெரிவிக்கப்படுகிறது. ஆயர் கெனத்பெர்னான்டோவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கு சென்ற ஜனாதிபதி அங்கு கெனத்பெர்னான்டோவுடன் நாட்டின் தற்போதைய சமூக பிரச்சினை பலவற்றை ஆராய்ந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

சமூக சமய மறுமலர்ச்சி குறி (10 ஆம் பக்கம் பார்க்க)

## வீரசேகரா கூற்றுக்கு அங்கமன மறுப்பு

எரிபொருள் சம்பந்தப்பட்ட எதுவும் போர் தொடர்பான பொருள்களே என கூட்டுப் படைத் தலைமையக பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன தெரிவித்தார்.

பெற்றோல், யூரியா, பற்றரி என்பன போர் தொடர்பான பொருள்கள் அல்ல என பிரிகேடியர் ஆனந்த வீரசேகர கூறியிருப்பது குறித்து கேட்கப்பட்ட போதே கூட்டுப்படை பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கைதிகள் விடுவிப்பை இராணுவம் குழப்பவில்லை

பிரிகேடியர் அங்கமன மறுப்பு

(கொழும்பு)

போர்க்கைதிகளை விடுவிக்கும் முயற்சி இராணுவத்திலுள்ள கடும் போக்காளர்களினால் குழப்பியடிக்கப்பட்டுவிட்டதாக வெளியான செய்திகளில் எந்தவிதமான உண்மையும் இல்லை என கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன தெரிவித்தார்.

முன்னர் விடுதலைப் புலிகள் வசமுள்ள சிங்கள போர்க் கைதிகளை விடுவிக்க சில பொருள்கள் மீதான தடையை நீக்க அரசு இணங்கியபோதிலும் இராணுவத்திலுள்ள சில (10 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடன்

# கேரதீவு இறங்குதுறையை ஐ. நா. பிரதிநிதிகள் பார்வை

(நமது நிருபர்)

கேரதீவு பகுதி இறங்குதுறையை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் பூரண பாதுகாப்புடன் நேற்று சென்று பார்வையிட்டனர்.

யாழ். குடாநாட்டுக்கான உணவுப்பொருள்களை எடுத்து வருவதற்காக சங்குப்பிட்டி கேரதீவு பாதையை பயன்படுத்துவது தொடர்பாகவே நேற்றுக்காலை அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய கொழும்பு வதிவிடப் பிரதிநிதி டாக்டர் பீற்றர்நிக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் தினவிடுமுறை

கரும்புலிகள் நாளைமுன்னிட்டு எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றையதினம் அனைத்துப் பாடசாலைகளுக்கும், அரச திணைக்களங்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும், வர்த்தக நிலையங்களுக்கும் பொது விடுமுறை நாளாகும்.

## வரி விளம்பரம்

**உணவுப் பார்சல்கள்**

ஜோ. எகட்டனின் ஜெசித் தாராவின் உணவுப்பார்சல்கள் முற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி. செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக் கழக முன்வீதி, கந்தர்மடம் ஆகியஇடங்களிலும்பெற்றுக் கொள்ளலாம். (சி-6898

**விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஆலங்கட்டை றோட் கொள்ளாவத்தை டெரலிகண்டி கற்கண்டுமாமா சைக்கிள்கடை, பொலிகண்டி. (5220)

**றெனி முக்குக்கண்ணாடியகம்**

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (5242)

**சாணி விறாட்டி**

விறகுப் பஞ்சமா? இருக்கவே இருக்கிறது சாணிவிறாட்டி. சமையலுக்கு அதிக கணகணப்பைத் தருகிறது. சாணி விறாட்டி சிக்கனமானது. சிரமம் அறவே இல்லை. விறாட்டி ஒன்று ரூபா 1/- மட்டுமே. ''மில்க்வைற்''. (சி-6930)

**வேப்பம் விதை**

வேப்பம்விதை வாங்குகிறோம். —மில்க்வைற் (சி-6929)

**உடன் விற்பனைக்குண்டு**

வெள்ளைப் பேட்டுக் குஞ்சு, பிறவுண் சேவல் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு தொடர்பு; ''மல்லிகாபதி'' (மானிப்பாய் 5252)

**உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்**

நல்ல நிலையில உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சி-6733)

**கோழிகள், குஞ்சுகள்**

முட்டையிடும் ஊர்க்கோழிகள், நடுத்தரக் குஞ்சுகள், 15 நாள் வயது—லோமன் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் கோல்டன்கொமற் சேவல் குஞ்சுகள், சுத்த இன வெள்ளடியன் கோழிகள் விற்பனைக்கு உண்டு யாழ் வீதி, உரும்பராய் சந்தி (அன்னை பூபதி கலையரங்கம் அருகில்) (5259)

**BECON -** யாழ்ப்பாணம்

**O/L**

DAY CLASS 1993 DEC.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

**1. 7. 93**

8. 00 am

யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர்களின் சேவை (சி-6915)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



02-07-1992 அன்று மாந்தீவில் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

விடுதலைப்புலிகளின் விசேட வேவுப்பிரிவைச்சேர்ந்த

### லெப். மறவன் (வில்வம்)

[ஜெயபால் பெர்னாண்டோ பீலிக்ஸ் றெனால்ட்]

வெற்றிலைக்கேணி

| | |
|---|---|
| தாயின் மகிழ்விற்காய் | தாயக விடிவிற்காய் |
| 08.03 1975 | 02 07.1992 |

பள்ளிப் பருவமதில் பாங்கான கல்வியை
பாதியிலே கைவிட்டுப் படையணியில் சேர்ந்தாயோ
பாசமிகு பெற்றோரும் பண்பான சகோதரரும்
பாரில் பட்டதுயர் பாலன் நீ அறியாயோ
பயிற்சி முகாமில் உன்திறமை கண்டே
படையணியை வழிநடத்தும் பொறுப்பை நீயேற்றாய்
பாடிய பூங்குயில் மாந்தீவு பறந்ததோ
பாடடிழந்து மூச்சிழந்து பாரில விழுந்ததோ
பாசமிகு நினைவலைகள் ஆண்டொன்று சென்றாலும்
பறந்துன்னை நாடுதையா மறவா எம்செல்வமே.

இவருடன் 2.7.92 அன்று மாந்தீவில் வீரச்சாவைத் தழுவிககொண்ட சிவகாநுசன், திருவருள், கதிர்ச் செல்வன் ஆகியோரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலியிலும, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், பொதுமக்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைககினறோம்.

-குடும்பத்தினர்.

இன்பு வீதி,
புலோலி தெற்கு,
புலோலி, (5248)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 19 — 09 — 1967



உதிர்வு: 25 — 06 — 1991

### செல்வி தர்சனா குமாரசாமி

(ஆசிரியை அ. த. க. பாடசாலை—தர்மக்கேணி)

திதி: 02-07-1993

எங்கள் அணையாத தீபமே,
பூவாய் மலர்ந்து
புன்னகைத் தேன் சிந்தி
முழுதாய் மணம் வீசுமுன்னே
மண்ணில் சருகாய் உதிர்ந்தனையோ.

உன் இழப்பால் இங்கு
எம்மை இருள் சூழ்ந்ததனால்
இருளில் இருந்து கொண்டே
ஒளியாம் உன்னைத் தேடுகிறோம்.

—உயிருள்ளவரை
உன் பிரிவால் வாடும்
அன்புக் குடும்பத்தினர்

பெரியபளை,
பளை. (5255)

---

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் அனுமதியுடன்

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழக வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படும்

## மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இடம்:- சுன்னாகம் கந்தரோடை சவாரி மைதானம்

காலம்:- 4.7.93 ஞாயிற்றுக்கிழமை பி ப.2 00 மணி

குறிப்பு:- போட்டிகள் A. B C என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம்

(சி-6939)

---

## நினைவு கூருகின்றோம் ... 1993-07-02

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ **சாந்தன்** (நாகராசா சாந்தரூபன் - மாவடிச்சேனை, மூதூர் - திருமலை)

கிளிநொச்சி, பரந்தன் - முரசுமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

முரசுமோட்டைப் பிரதேசப் பொறுப்பாளர்-

**குமாரதாஸ்** (கந்தையா குமாரதாஸ் - பன்றிசுட்டான், கண்டாவளை, பரந்தன் - கிளிநொச்சி)

1988ஆம் ஆண்டு வன்னேரிக்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**சமுத்திரன்** (இராமநாதன் மனோகரராசா - வன்னேரிக்குளம்)

1989ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

**சுதா** (சீ. ஜெயக்குமார் - யாழ்ப்பாணம்)

வவுனியா - தோணிக்கல் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

1990ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**பரணி** (இரத்தினம் சுரேந்திரன் - துறைமுகம், மடத்து வளவு, காரைநகர் - யாழ்)

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 2 தமிழர்கள். இதே மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண், இளைஞன் உட்பட 04ஆம் கொலனியைச் சேர்ந்த 03 தமிழர்கள்.

மட்டுநகரில் சுற்றிவளைப்பினை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நொச்சிமுனையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மன்னார் ஓலைத்தொடுவாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். காளி** (அ. புவிராஜசிங்கம் - நாவற்காடு, கரவெட்டி - மட்டு)

**கப்டன் பரிது** (சிமியோன் அல்பிரட் கமிலிஸ்-ஓலைத் தொடுவாய் - மன்னார்)

**லெப். பரமேஸ்** [க. உதயகுமார் - நல்லூர் - பூநகரி- மன்னார்]

**வதனன்** [தானியூஸ் ஜேம்ஸ்பிரீஸ் - வங்காலை மன்னார்]

திருமலை பேராற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**மோகன்** [வீரக்குட்டி அருட்செல்வம் - 1062—9-ம் கொலனி, தம்பலகமம் - திருமலை]

**ராஜு** [கறுப்பையா கனகராசா - கன்னியா-திருமலை]

**கிறில்** (சைமன் மாத்தூஸ் - 385, செல்வநாயகபுரம்- திருமலை)

**குமாரன்** [— — —]

திருமலை - இறால்குழி, இத்திக்குளம், மரவட்டைக்குளம், நெய்யத்திக்குளம், உப்புவெளிப் பகுதிகளைச் சுற்றிவளைத்த கட்டைபறிச்சான், தோப்பூர் முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினரால் உப்புவெளியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1992ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். பானுமதி** (தர்சினி சிறியானி புஸ்பநாதன்- இல 54/57, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்)

வவுனியா - பேயாடிக்குளம் காவலரண் பகுதியில் வாகனங்கள் சோதனையிடப்பட்டுக் கொண்டிருக்கும் போது பொதுமக்கள் மீது தேசவிரோத சக்திகள் துப்பாக்கிப் பிரயோகம்செய்ததில் கொல்லப்பட்ட சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சாரதி ஒருவர்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6928)

# மூன்றாம் உலகத் தலைவர்களின் உயிருக்கு அமெரிக்காவால் பெரும் அச்சுறுத்தல்

**பாலகுமாரன்**

வளைகுடாப் போரின் போது அமெரிக்காவினால் கையாளப்பட்ட பல பிரசார உத்திகள் எவ்வளவுபொய்மை நிறைந்தவை என்பதைப் பற்றிய தகவல்களை ''நியூயார்க் டைம்ஸ்'' போன்ற அமெரிக்கப் பத்திரிகைகளே அண்மைக் காலமாக அம்பலப் படுத்தி வருகின்றன. குவைத்தில் ஈராக்கியப் படைவீரர் செய்த கொடுமைகளுக்கு உச்சகட்ட உதாரணமாக பெருமளவுக்கு விளம்பரப்படுத்தப்பட்ட 'நயிராவின் கண்ணீர் கதை' வெறும் கட்டுக்கதை என்பது இப்போது உறுதியாகிவிட்டது. ஈராக்கிய வீரர்கள் குவைத்தின் மருத்துவமனைக்குள் புகுந்து அங்கு 'இன்கு பெட்டரில்'இருந்த இளம்சிசுக்களை தூக்கி வெளியில்எறிந்து கொடூரமாக கொன்றதை தான் நேரில் பார்த்ததாக அமைந்தது நயிரா என்னும் பெண்மணியின் வாக்குமூலம். ஆனால் இன்று நயிரா என்கிற இப் பெண் வேறுயாரும் அல்ல, அமெரிக்காவிற்கான குவைத் நாட்டு தூதுவரின் மகள் என்பதும் அவளும் ஏனைய சாட்சிகளும்அமெரிக்க விளம்பர நிறுவனம் ஒன்றினால் முறையாக பயிற்றுவிக்கப்பட்டு உண்மைக் கதை போல ஒளிநாடாவில் பதியப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது என்ற உண்மை இப்போது அம்பலமாகிவிட்டது.

எனவே தான் முன்னாள் அமெரிக்க சனாதிபதியான ஜோர்ஜ் புஷ்ஷை குவைத்தில் வைத்து வாகனக்குண்டொன்றை வெடிக்கச் செய்வதன் மூலமோ ,அல்லது அது தவறுமிடத்து மனிதக் குண்டொன்றை வெடிக்க வைப்பதன் மூலமோ கொலை செய்ய முயற்சி எடுக்கப்பட்டதாக வெளிவந்த செய்திகளை உலகம் பெரிதாக எடுக்கவில்லை. இது தொடர்பாக 14 ஈராக்கியர்கள் மேல் குவைத் இராணுவ நீதிமன்றம் ஒன்றில் வழக்கொன்று நடந்து கொண்டிருக்கிறது. இந் நிலையில் எவரும் எதிர் பார்க்காத முறையில் அமெரிக்கா இக் கொலை முயற்சி ஐ. நா. வின் 51-வது சாசனப் பிரிவின்படி அமெரிக்க மக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்றும், ஒரு தற்பாதுகாப்பு நடவடிக்கையாக தான் ஈராக்கைத் தண்டிக்கப் போவதாகவும் கூறியது. சென்ற சனிக்கிழமை நள்ளிரவில்ஈராக்கிய புலனாய்வுத்துறை தலைமைப் பணிமனையின் மீது 23 ஏவுகணைகளை ஏவியது. ஈராக்கிய குடிமக்கள் மட்டுமன்றி உலகமே இச் செயலால் ஒருகணம் அதிர்ந்தது.அமெரிக்கா என்ன சொல்ல வருகின்றது? என்பது எவருக்குமே புரியவில்லை. சென்றவெள்ளிக்கிழமை மேற்கொள்ளவிருந்த இவ் ஏவுகணைத் தாக்குதல் அன்று முசுலிம்களின் புனித நாள் என்பதால் ஒரு நாள் தள்ளிப் போட்டதாகவும், குறிதப்பி விழுந்த ஏவுகணைகளால் கொல்லப்பட்ட மக்களுக்காக ஆழ்ந்த துக்கத்தை தெரிவிப்பதாகவும் கிளிண்டன் தனது மனிதாபிமானத்தை உலகிற்கு எடுத்துக் காட்டினார்.

இத்தோடு நில்லாமல்ஐ.நா.வின் பாதுகாப்பு சபையை உடனடியாகக் கூட்டி தன்னிலை விளக்கம் வேறு கொடுத்து தனது செயலுக்கு ஐ. நா. வின் ஒப்புதலை எதிர்பார்த்துநின்றது. ஆனால் இம்முறை நடந்ததோ வேறு. கடுமையான எதிர்ப்பை சீனா காட்ட பிரான்சு, பிரேசில் மற்றும் ஐந்து அணிசேரா நாடுகள் தீர்மானத்தை ஆதரிக்க, மறுக்க பாதுகாப்புச்சபை அமெரிக்காவை கைவிட்டு விட்டது. ஏனென்றால் ஐ நா.வின் 51ஆவது இலக்க சாசனத்தை தனிநபர் அல்லது குழுக்களுக்கு எதிரான தாக்குதல நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாது. அது ஒரு நாட்டிற்கு எதிரான ஆயுதத் தாக்குதலுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்த முடியும். அதுவும் இங்கு சதி முயற்சி ஒன்றிற்கு திட்டம் தீட்டப்பட்டதாக கூறப்பட்டதேயன்றி அத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. சதி வடிவில் இருப்பதை தாக்குதலாகக் கருத முடியாது எனச் சட்ட வல்லுநர்கள் கூறியுள்ளனர். இதனால் ஐ. நா.வின் நிழலுக்குப் பின்னே மறைந்து தன்னை நீதிமானாகக் காட்ட அமெரிக்காவினால் முடியாது போய்விட்டது.

இவை ஒருபுறமிருக்க, இதுவரை காலமும் அமெரிக்கா தனது மத்திய புலனாய்வுத் துறை ஊடாக மேற்கொண்ட அரசியல் படுகொலைகள் எத்தனை? எவ்வளவு பெறுமதியான 3ஆம் உலகத் தலைவர்கள் பழிவாங்கப்பட்டார்கள்? எவ்வளவு தடவை சுதந்திர நாடுகளின மேல் படைகளை அனுப்பி அல்லது இராணுவ சதிகளை ஏற்படுத்தி தனக்கு ஆதரவானோரை பதவியில் அமர்த்தியது? என்கின்ற உண்மைகளை ஒரு தரம் மீட்டுப் பார்த்தால் ஐ. நா.வின் 51ஆவது சாசனப்படி அமெரிக்காவிற்கு அல்லவா முதலில் தண்டனை வழங்க வேண்டும். இன்று ஈராக்கிற்கு ஒரு நீதி பொஸ்னியாவிற்கு ஒரு நீதியா? என உலகம் பலமாக குரல் எழுப்புகிறது. ஒரு தடவை பழைய காட்சிகளை இங்கு திரை விலக்கிப் பார்ப்பது அவசியமாகின்றது.

வளைகுடாப் போரை பிரகடனம் செய்து 1991ஆம் ஆண்டு சனவரி மாதம் 16ஆம் திகதி சனாதிபதி புஷ் பேசிய போது ''புதிய உலக ஒழுங்கொன்றைக் கட்டி எழுப்ப இதுதான் சந்தர்ப்பம், எல்லாத் தேசங்களும் சட்டங்களை மதித்து நடக்கப் பழக வேண்டும். ஐ. நா. சபை அதனை உருவாக்கியோர் விரும்பியது போல உலக அமைதி காண உழைக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.ஆனால் குவைத் மீது ஈராக் படை எடுத்தமைக்காக43 நாட்களில் 73,000 தடவைகள் குண்டு வீசிய அமெரிக்கா-லிபியாபயங்கரவாதத்திற்கு துணைபே..வதாகக் கூறி 1986-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் லிபியத் தலைநகரம் மீது குண்டுமாரி பொழிந்தது மட்டுமன்றி, லிபியத்தலைவர் கடாபியைக் கொலவதற்காக அவரது வதிவிடம் மீது F. III ரகபோர் விமானங்கள் ஒவ்வொன்றும் 2,000 இறாத்தல் கொண்ட 16 குண்டுகளை வீசி அவரது வளர்ப்பு மகளான 18 மாதமே நிரம்பிய கனாவைக் [Hana] கொன்று அவரது இரு மகன்களையும் காயப்படுத்தியதும், பின்னர் 1991-ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் பக்தாத்திற்கு வடமேற்கில் உள்ள வானூர்தி தளத்தில் சதாம் உசைன் வழமையாகத்தங்கும் பதுங்கு குழி மீதும் F-III ரகபோர்விமானங்கள 5,000 இறாத்தல் குண்டுகளை வீசியதும் எந்த நியாயத்தில் சேரும் என்று தெரியவில்லை. இதுபோலவே வியட்நாமுக்கு படை அனுப்பியது, கிரனடா தீவின் இடது சாரித் தலைவரான மொறிஸ் பிஷப் பதவிக்கு வந்ததை விரும்பாமல், அவருக்கு எதிரான சதிகளில் ஈடுபட்டு 1983 அக்டோபர் மாதம் பிஷப் கொல்லப்பட்ட ஆறு நாட்களின் பின் தனதுபடைகளை அனுப்பி அந்நாட்டு அரசியலில் தலையிட்டது, அதன் பின்னர்பனாமாவில் தனது ஆதரவோடு பதவிக்கு வந்த மனுவல் நொறியேகா சி.ஐ.ஏயின் கட்டுப்பாட்டை மீறி போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டபோது தனது படைகளை அனுப்பி தனது விருப்பப்படி நொறியேகாவை கைது செய்து பனாமாவின் தன்னாட்சி உரிமையை சிதைத்தது, இத்தகைய அமெரிக்காவின் செயல்கள் எந்த சர்வதேச சட்டத்திற்கு பொருந்தும் என்பதும் விளங்கவில்லை.

ஐ நா.வின் 51வது சாசனத்தைகாட்டி ஜோர்ஜ்புஷ்ஷை கொலை செய்ய முயன்றமைக்காக தண்டனைவழங்க அமெரிக்காவிற்கு முடியுமென்றால், ஏன் மூன்றாம் உலக நாடுகளின் வளரும் தலைவர்கள் பலரைக் கொலை செய்தமைக்காக அமெரிக்கா இற்றை வரை தண்டிக்கப்படவில்லை? யார் அமெரிக்காவை தண்டிப்பது என்றகேள்வி எழக்கூடும். இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்கோ ஒருநாள் இக்கேள்விக்கு விடை கிடைக்கும்-இன்று அமெரிக்காவின் முன்னைய படுகொலைகள் தொடர்பான உண்மைகள் யாவும், இப் படுகொலைகளைச் செய்வதற்கு கருவியாகப் பயன்பட்ட முன்னாள் சி. ஐ. ஏயின் பணியாளர்களாலேயே இன்று வெளிப்படுத்தப்படுகின்றன. அதிலும் குறிப்பாக 1944இல் இருந்தே அமெரிக்க புலனாய்வுத்துறையில் சேர்ந்து பின்னர் சி. ஐ. ஏயின் பணிப்பாளராக பதவி வகித்த வில்லியம் கொல்பி எழுதிய நூலான ''சி ஐ ஏ. யின் 30 வருடங்கள்'' பல விடயங்களை அம்பலமாக்கி விட்டது. அதுபோலவே அமெரிக்கப்படைவீரர் வியட்நாமிய மைலாய் [Mylai] கிராமத்தில் லெப்டினன்ட் கலி தலைமையில் செய்த படுகொலைகள் பற்றிய விபரங்கள் ''நியூயார்க் டைம்ஸ்'' பத்திரிகையின் நிருபரான செய்மோர் கேர்ச் (Seymour Hersh) போன்ற பல நிருபர்களும் உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளனர்.

ஆபிரிக்க கண்டத்தின் விடிவெள்ளியாக உருவெடுத்த கொங்கோ தலைவரான [தற்பொழுது சயர்] பற்றிஸ் லுமும்பாவை (Lumumba) தீர்த்துக்கட்டுமாறு அப்போதைய அமெரிக்க சனாதிபதி ஐசனோவர் அப்போதைய சி ஐ.ஏயின்பணிப்பாளர் அலன் டல்லசுக்கு உத்தரவுஇட்டதும் சி ஐ ஏ யின் ஆய்வு கூடத்தில் இதற்காக விசேடமாக வேதியல் நஞ்சுப் பொருள் ஒன்று தயாரிக்கப்பட்டு கொங்கோவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இன்று ஆவண வடிவத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இக்கொலை முயற்சி சரிவராதபோதும் வேறுவிதமாக 1961 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கைக்கூலிகளை பயன்படுத்தி லுமும்பா கொல்லப்பட்டார். அது போலவே 1961ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்காவின் போக்கோடு ஒத்துப் போகாத டொமினிக்கன் குடியரசின் சனாதிபதி றபாயல் ட்டுஜிலோ (Rafael Trujillo) சி ஐ ஏ. உளவாளிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதே போல லத்தீன் அமெரிக்காவின் புதிய தலைமுறையின் தலைவராக சிறந்த மனிதாபிமானியாக அதேசமயம் சிலி தேசத்தின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது லத்தீன் அமெரிக்க பொதுவுடமைவாதி எனக் கருதப்படும் சல்வடோர் அலன்டே சி.ஐ.ஏயினால் படுகொலை செய்யப்பட்டது என்றும் மறக்க முடியாத படுகொலையாகும்.

1970 ஆம் ஆண்டு சிலி நாட்டுபொதுத்தேர்தலில்மகத்தான வெற்றி பெற்ற அலன்டேயை 73ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அப்போதைய அமெரிக்க சனாதிபதி நிக்சனின் உத்தரவுப்படி அப்போதைய சி. ஐ. ஏயின் பணிப்பாளர் றிச்சேர்ட்கெல்ம்ஸ் (Richard Helms) ராணுவச் சதிப் புரட்சிஒன்றின்மூலம்கொன்று, தமக்கு ஆதரவான கொடுங்கோலனான பினாச்சட் என்பவரை பதவியில் அமர்த்தினர். இவை எல்லாம் வெற்றிகரமாக சி ஐ.ஏ யினால் செய்யப்பட்ட படுகொலைகள். ஆனால் இற்றை வரை எத்தனையோ முயற்சிகள் எடுத்தும் படுகொலை செய்யப்பட முடியாத கியூபத் தலைவர் பிடல் கஸ்ரோ சி. ஐ. ஏயின் படுகொலைகளுக்கு உயிர்ச் சான்றாக விளங்குகிறார். 1960-1965 ஆண்டுக்கும் இடையில் தற்செயல் விபத்துக்களை உருவாக்கியும், நஞ்சூட்டப்பட்ட வில்லைகள்—பேனாக்கள், இரசாயன நஞ்சுப் பொருள்கள் அடங்கிய சுருட்டுக்கள் என எத்தனையோ விசித்திரமான முறைகளை கையாண்டும் கஸ்ரோவை கொல்ல அமெரிக்கா முயன்றது. அதேசமயம் கியூபப் புரட்சிக்கு எதிரான கைக்கூலிகளைப் பயன்படுத்தி பன்றிகள் வளைகுடா (Bay of Pigs) என்னும்பகுதியில்தரையிறங்கி பிளேயாகிறன் (Playa giron) எனும் இடத்தில் நடைபெற்ற சண்டையில் படுதோல்வி அடைந்த முயற்சியும் நடைபெற்றது. இப் படுதோல்வி முயற்சியில் ஏற்பட்ட அவமதிப்பை தாங்க முடியாத அப்போதைய சனாதிபதி கெனடி சி.ஐ.ஏயை நார் நாராக கிழித்துப் போடப் போவதாக சினம் கொண்டு உரைத்ததாகக் கூறப்படுகின்றது. பின்னர் அவரும் மர்மமான முறையில் மரணமானார்.

இப் படுகொலைகள் எல்லாவற்றையும் விட, உலகை உலுப்பிய படுபாதகக் கொலையொன்று பொலிவிய காட்டில் 67ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ஆம் திகதி அமெரிக்க றேஞ்சஸ் படை வீரர்களினால் செய்து முடிக்கப்பட்டது. கியூபப் புரட்சியை உருவாக்க ஒத்துழைத்து விட்டு சுகபோகங்களை நாடாமல் திரும்பவும் பொலிவிய நாட்டுக் காடுகளுக்குச் சென்று போராடிய புரட்சியாளன் சேகுவாராவை (Cheguera) கிகுறா (Higura) என்னும் கிராமத்தில் இவர்கள் கட்டுக் கொன்றார்கள். சாகும் போது சேகுவாரா ''எனது தோல்வியானது வெற்றி என்றும் அடையப்பட முடியாதது என்பதைக் குறிக்கும்பொருளல்ல. இமயத்தின் எவரஸ்ட் சிகரத்தை ஏற முயன்று தோற்றவர்கள் பலர். ஆனால் இறுதியில் எவரஸ்ட்சிகரம் வெற்றிகொள்ளப்பட்டது'' எனக் குறிப்பிட்டார்.

அமெரிக்க வல்லாண்மைக்கு எதிராக 'சே' அன்று கூறியது என்றும் பொருந்தும் என்பதே வரலாறு இனிச் சொல்லப் போகும் செய்தியாக இருக்கும்.


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நல்லூர் கந்தசுவாமி கோவில் 1993ஆம் ஆண்டு

**மகோற்சவகால தற்காலிகக் கடைகள்**

01. நல்லூர் இந்து விடுதிக்கு அருகாமையிலும்,

02. பண்டாரமாளிகை வளவில் தீயணைக்கும் சேவை நிலையத்திற்கு கிழக்குப்பக்கமாகவும், மேற்குப்பக்கமாகவும்

நிலம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 16-07-93-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 50-00ஐயும். மீளளிக்கப்படக் கூடிய கேள்விப் பிணையாக ரூபா 250/-ஐயும் செலுத்துவதன் பேரில் 15-07-93-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் (இணைப் பிரதிகளில்) கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 16-07-93-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இக்கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் நானாவித இறை வரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

— மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
30-06-1993.

(இ-6935)

# 13 மாத தலைமறைவு வாழ்வு
# ஒரு முன்னாள் டி. ஐ. ஜியின்
# ஒப்புதல் வாக்குமூலம்

ஒரு வெற்றிகரமான கதாநாயகன் போல உடுகம்பொல மீண்டும் கொழும்புக்கு வந்துவிட்டார். ''முடியுமானால் என்னைக் கைது செய்து பாருங்கள்'' என்று சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்திற்கு பகிரங்கமாகச் சவால் விட்ட இந்த முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுங்கப் பரிசோதனைக்கும் கூட உள்ளாகாமலேயே கட்டுநாயக்காவின் ஊடாக உட்புகுந்தார். மீனவன்போல வேடம்போட்டு மொறட்டுவ ஆற்றில் ஒரு படகில் ஏறுவதற்காக முட்புதர்கள் நிறைந்த பற்றையினூடு ஊர்ந்து சென்ற அவர், கட்டுநாயக்காவில் தரை இறங்கியபோது 'செங்கம்பள வரவேற்பு' கொடுக்கப்பட்டிருக்கின்றது. பதின்மூன்று மாத காலம் நீடித்த ஒரு பொலிஸ் அதிகாரியின் தலைமறைவு வாழ்வு இப்போது முடிவுக்கு வந்து விட்டது.

பொலிஸ்மா அதிபரிலும் பார்க்க சக்தி மிகுந்தவராக-விசேட நடவடிக்கைகள் பணியகத்தின் தலைவராக - ஜனாதிபதி பிரேமதாசாவின் சாப்பாட்டு மேசைவரை அவரது முன் அனுமதியின்றிச் செல்லக் கூடிய தகைமைபெற்ற விசேட விருந்தினராக - விளங்கிய பிரேமதாசா உடுகம்பொல, தலைமறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டது எப்படி? அவரைக் கைது செய்யும்படி நீதிமன்றம் ஆணை பிறப்பிக்க வேண்டிய சூழல் எப்படி உருவானது? சட்டவிரோதமான கொலைக் கும்பல் ஒன்றினால் கொல்லப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலைத் தன்னால் வெளியிட முடியும் என்று உடுகம்பொல கையெழுத்திட்டு வெளியிட்ட சத்தியக் கடதாசியின் இன்றைய நிலை என்ன? இந்தக் கேள்விகளுக்குப் பதில் தேட முனையும்போது அவையெல்லாம் கொல்லப்பட்டவர்களின் சடலங்களைப் போல புதைக்கப்பட்ட உண்மைகளாகி விட்டதைக் காணலாம்.

திகில் நிறைந்த சம்பவங்களில் ஈடுபட்டு 'புகழ்' பெற்றவராக விளங்கிய உடுகம்பொல, சட்டத்தரணி லியனாராச்சி, பத்திரிகையாளர் ரிச்சர்ட் டீ சொய்ஸா போன்றோரின் மரணங்களோடு தொடர்பு படுத்தப்பட்ட நிலையில் மனித உரிமை இயக்கங்களின் கண்டனத்திற்கு உள்ளானார். எப்போதும் நவீன ஆயுதங்களைத் தன் வசம் வைத்திருந்த உடுகம்பொல தன் அலுவலக அறையின் குப்பைக் கூடையிலும், மேசை லாச்சியினுள்ளும் கூட விதம் விதமான ஆயுதங்களை வைத்திருந்து மனித உரிமைகள் தொடர்பான ஆர்வலர்களை மிரட்டிக் கொண்டிருந்தார். 'டயர்' கலாசாரத்தின் சூத்திரதாரியான உடுகம்பொல பல்லாயிரம் கொலைகளை நிகழ்த்துவதற்கு, ஜே. வி. பியினருக்கு எதிரான நடவடிக்கைகள் என்று அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மனித உரிமைகள் இயக்கங்களின் கண்டனங்கள் மலையளவுக்கு உயர்ந்தபோது உடுகம்பொல, ஜனாதிபதி பிரேமதாசா அரசினால் அமெரிக்காவிற்கு கௌரவமாக நாடு கடத்தப்பட்டார். அமெரிக்காவில் இருக்கும் சிறிலங்காத் தூதுவராகத்தில் பணியாற்றும் அவரது மனைவியிடம் அனுப்பி வைக்கப்பட்டார். சில மாதகாலம் நீடித்த இந்தக் கட்டாய லீவு முடிவுக்கு வந்தபோது உடுகம்பொல போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் தலைவரானார். கொழும்பிலும், சுற்றுப் புறங்களிலும் கசிப்பு மற்றும் கள்ளச்சாராய வேட்டைகளைப் பொலிஸார் தீவிரமாக்கினர். உடுகம்பொலவின் பெயர் மீண்டும் பத்திரிகைகளில் அடிபட்டது நாட்டுக்குள் போதைப் பொருள் கடத்துவதில் பேர் பெற்றவன் என்று கூறப்பட்டு' கசினோ மன்னன்' 'ஜோசிம்' நாடு கடத்தப்பட்டான்.

## தலைமறைவாகிய கதை

இவ்வாறு பெயர் அடிபட்ட சூழ்நிலையில்தான் உடுகம்பொலவுக்கும் அரசுக்கும் இடையிலான உறவில் விரிசல்களும் விழத்தொடங்கியிருந்தது இந்த உறவு விரிசல் எங்கே? எப்படி? எதனால்? ஏற்பட்டது என்று ஆராய முற்படுவது அடிமுடி தேடிய கதை போல ஆகிவிடக்கூடும். எனினும் பிரேமதாசா உடுகம்பொலவின் சகோதரர் மேஜர் உடுகம்பொல சிங்கப்பூரிலிருந்து தங்கக்கட்டிகள் கடத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார் என்பதுகுறிப்பிடத் தக்கது.

பொலிஸ்காவலில் இருந்தபோது சட்டத்தரணி லியனாராச்சி மரணமானது குறித்த தான வழக்குடன் தொடர்புபடுத்தப்பட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி பணிக்கப்பட்டார். நீதிமன்றத்தில் ஆஜரானால் தான் கைது செய்யப்படக்கூடும் என்றும் தனது உயிருக்கு ஆபத்து நேரிடக்கூடும் என்றும் கருதிய உடுகம்பொல தலைமறைவானார்.

பொலிஸ் திணைக்களத்தினர் உடுகம்பொலவைத் தேடி நாடு முழுவதும் வலை விரித்திருந்த அதேவேளையில் உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலரும், பங்களாவாசிகளான உடுகம்பொலவின் நண்பர்களும் அவருக்கு அடைக்கலம் வழங்கியிருந்தனர். உடுகம்பொல தங்கியிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பெயரில் கொழும்பில் தமிழர் ஒருவரின் வீடு பொலிசாரால் உடைக்கப்பட்ட அதே சமயத்தில் கொழும்பு நகரிலேயே பொலிஸ் அதிகாரி ஒருவரின் வீட்டிலேயே அவர் தங்கியிருந்திருக்கிறார்.

கொழும்பு நகரில் இரகசியப் பொலிசாரின் தேடுதல் வேட்டை தீவிரமாகியபோது காலி கண்டி, போன்ற நகரங்களுக்கு அவர் இடம் பெயர்ந்தார் ஒரு சமயத்தில் சிங்கராஜா வனத்துக்கு அருகே இருக்கும் பெருந்தோட்டம் ஒன்றில் அரசாங்க அதிகாரி போல வேடமிட்டு நடமாடினார் இந்தச் சமயத்தில்தான் அவரது சகோதரர் ஒருவர் காலமானார். இம் மரணவீட்டில் துக்கம் விசாரிப்பதற்காக 'உடுகம்பொல வருகை தரக்கூடும், என்ற சந்தேகத்தின் பேரில் இரகசியப் பொலிசார் அந்தப் பிராந்தியத்தையே சுற்றி வளைத்தனர். எனினும் முற்றுகையை முறியடித்து மரணவீட்டிற்குச் சென்று துக்கம் விசாரித்த அவர் தனது 'வீரதீரச் செயல்' குறித்துப் பத்திரிகைகளிலும் விளம்பரப் படுத்த தவறவில்லை.

## நாட்டை விட்டு வெளியேற்றம்

கொழும்பில் மட்டுமன்றி கண்டி மாத்தளை உட்பட பெரு நகரங்களிலும், பெருந்தோட்டங்களிலும் இருந்த பங்களாக்களை தலைமறைவு வாழ்வின்போது தங்குமிடங்களாகப் பயன்படுத்திய உடுகம்பொல, கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் ஓர் இக்கட்டான செய்தியை செவிமடுக்க நேர்ந்தது. முக்கிய அமைச்சர் ஒருவர் மூலமாக அனுப்பப்பட்ட அச்செய்தியை உதாசீனம் செய்ய முடியாதவர் ஆனார். கொலைசெய்து விடும்படி ஜனாதிபதி பிரேமதாசா உத்தரவு பிறப்பித்து விட்டதாகக் கிடைத்த அந்த செய்தியை அடுத்து உடுகம்பொல நாட்டை விட்டு வெளியேறினார்.

குடும்பத்துடன் இணைந்து கொள்வதற்காக அமெரிக்கா செல்லஉடுகம்பொல முற்பட்டபோது ''மனித உரிமைகள் மீறப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்'' எனப் பிரேமதாச அரசு தெரிவித்ததைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரகம் அனுமதி வழங்க மறுத்தது. ஆனால் அவர் படகில் ஏறிச்சென்று நடுக்கடலில் தரித்து நின்ற றோலர்' ஒன்றின் மூலம் தூத்துக்குடி துறைமுகத்தை அடைவதை இயற்கையினால் கூட தடுத்துவிட முடியவில்லை. இரண்டு நாட்களுக்கு மட்டுமே போதுமான உணவுப் பொருள்கள், நீர் மற்றும் சாராயப் போத்தல்கள், பிறண்டி என்பவற்றுடன் படகில்ஏறிய உடுகம்பொல திட்டமிட்டபடி தூத்துக்குடியை அடைவதை கடலில் ஏற்பட்ட புயற்காற்றினால் ஒரு நாள் மட்டுமே ஒத்திவைக்கமுடிந்தது. சாரமும், அரைக்கை சேர்ட்டும் மட்டுமே அணிந்திருந்தபோதும் தூத்துக்குடியில் தரையிறங்கியபோது ஆயிரம் அமெரிக்க டாலர்களும், ஐயாயிரம் இந்தியரூபாய்களும் இருந்துள்ளன. இரவு முழுவதும் நீடித்த பஸ் பயணத்தின் முடிவில் சென்னையின் மகாபலிபுரத்தில் சிலநாள் வாசம். விக்டர் பெர்னாண்டோ எனப் பெயர் மாற்றம். கொழும்பிலிருந்து விமானம் மூலம் அவருக்குத்தேவையான உடுபிடைவைகளும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களும் அனுப்பி வைக்கப்பட்டன. சென்னையின் பிரபல பத்திரிகையாளர்களோடும், சட்டத்தரணிகளோடும் மற்றும் முக்கியஸ்தர்களோடும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட பின்னர் உடுகம்பொல புதுடில்லிபயணமானார்.


புதுடில்லியில் வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கியிருந்தபோது சிறிலங்காவின் தலைநகர் வெடிகுண்டால் மீண்டுமொருமுறை அதிர்ந்தது. பிரேமதாசா சடலமானார். விஜயதுங்கா ஜனாதிபதியானார். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட உடுகம்பொலவிற்கு 'பச்சைவிளக்கு' காட்டப்பட்டது. சென்னையிலுள்ள சிறிலங்காத் தூதுவரகம் உடுகம்பொலவிற்காகத் தற்காலிக கடவுச் சீட்டை அவசரமாகத் தயாரித்தது. இவை அனைத்தும் கொழும்பு திரும்பிய உடுகம்பொல பத்திரிகையாளர்களிடம் சொன்ன செய்திகள்.

## சொல்லாத செய்திகள்

பிரேமதாசா உடுகம்பொல என்னும் இம்முன்னாள்பிரதிப் பொலிஸ்மா அதிபர் இனித் தான் செய்யப்போவது என்ன என்பது பற்றி இதுவரை எதுவும் தெளிவாகத் தெரிவித்திருப்பதாகத் தெரியவரவில்லை. அதுமட்டுமல்ல, கொழும்பிலுள்ள இந்தியத்தூதுவரகம் பிரேமதாசா உடுகம்பொலவின் தலைமறைவுக்கு உதவியதாக கூறப்பட்ட தகவல்கள் குறித்தும் உடுகம்பொல எதையும் உதிர்க்கவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான பிரேமதாசாவிற்கும் அவரது ஆணைக்கும் எதிராக தன்னைக் காப்பாற்ற முற்பட்ட அமைச்சர் யார் என்பதையோ, தமக்கு உதவிய உயர் பொலிஸ் அதிகாரிகள் பற்றிய விபரத்தையோ உடுகம்பொல வெளியிடவில்லை. இந்திய அரசின் உளவுத்துறை நிறுவனங்கள், மற்றும் கண்ணுக்குப் புலனாகாத சக்திகள் தனக்கு எவ்வகையில் உதவின என்பதையும் கூட உடுகம்பொல தெரிவித்துவிடவில்லை.

# "கரும்புலிகள்" பாடல் ஒலிப்பதிவு நாடா
## தமிழ் ஈழ இசையின்இன்னொரு நெடும்பாய்ச்சல்!

கரும்புலிகள்



வெளியீடு
விடுதலைப்புலிகள் கலை.பண்பாட்டுக்கழகம்

தமிழ் ஈழ மக்கள் எல்லோருக்குமே மிகவும் பிடித்தமான, நினைவிலே நின்றுநிலைக்கின்ற ''நெய்தல்'' பாடல் ஒலிப்பதிவு நாடாவினைச் சென்ற ஆண்டு வெளியிட்டு மகிழ்வுறும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் இவ்வாண்டு 'கரும்புலிகள்'' பாடல் ஒலிப்பதிவு நாடாவினைத் தமிழ் மக்களுக்கு வழங்கி மகிழ்கின்றது.

கரும்புலிகள் பற்றிய ஊரறியா உண்மைகள் பலவுண்டு. அவர்கள் பற்றிய வியப்புமிகு கதைகள் பல பொதுமக்களிடையே பேசப்பட்டுவருகின்றன. இவ்வொலிப்பதிவு நாடாவிலே பெரும்பாலான பாடல்கள் இவ்வுண்மையினை வெளிக்கொணருகின்றன. உறுதிக்கு இரும்பாகவும், எதிரிக்கு நெருப்பாகவும் விளங்கும் கரும்புலிகள் மரணத்தைப்பிடித்து மடியில்கட்டியிருப்பவர்கள். ஆனால் அவர்கள் பற்றிய உண்மைகள், அவர்கள் ஆற்றிய செயல்கள் ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்தனவாயுள்ளன.

ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கும் உண்மைகள்
— இது
ஊருலகம் அறிந்திடாத உறவின் தன்மைகள்

இத்தகைய வியப்புமிகு, நம்பமுடியாத, வீரமிகு உறவின் பின்னணியிலே இயங்கும் கரும்புலிகளில் சிலருடைய பெயர்களையே சொல்ல முடியாதநிலையும் உண்டு.

வாய்விட்டுப் பேர் சொல்லி அழமுடியாது
- வரும்
வார்த்தைகளால் உமைத் தொழமுடியாது
தாய்க்கும் தன் பிள்ளையின் முகம்
தெரியாது - எங்கள்
தலைமுறை உங்களின் பெயரறியாது.

என்ற அடிகளைக் கேட்கும்போது சொல்லவொண்ணாத் துயரம் நெஞ்சிலே நிறைகிறது.

## 'மொழியன் பூங்குன்றன்'

''கரும்புலிகள்'' நாடாவிலுள்ள ஒன்பது பாடல்களையும் கேட்பவர்கள் அவற்றுள் ஓர் ஒழுங்கமைப்பு இருப்பதைக் கண்டு கொள்வார்கள். கரும்புலிகளே,

''தாயக மண்ணின் காற்றே! என்னில்
வீசம்மா - நான்
சாகும் நேரம் கடலே! நீயும் மூசம்மா''

என்றும், ''எதிரியின் குருதியில் குளிப்போம்'', என்றும்,

''தலைகள் குனியும் நிலையில் இங்கே
புலிகள் இல்லையடா''

என்றும் ''போரம்மா - உனையன்றி யாரம்மா'' என்றும் பாடி இலக்குகள் நோக்கிச் செல்வது போன்ற நிலைப்பாட்டை உணர்த்துவனவாக நான்கு பாடல்கள் அமைய, கரும்புலிகளின் இயல்புகளைப் பிறர் கூறுவனவாக,

''இங்கு வந்து பிறந்த பின்பே
இருந்த இடம் தெரியும் - நாளை
சென்றுவிடும் தேதி சொல்ல
இங்கெவரால் முடியும்''

(8ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# இல்லாமை நீங்கி எல்லோரும் வாழ....

"அம்மா! அம்மா ...!" வீட்டுவாசலில் ஒரு சிறுவனின் அழைப்பொலிகேட்டது. யன்னலூடே பார்க்கின்றேன். ஒரு சிறுவன். பன்னிரண்டு வயது மதிக்கக்கூடியவன் நின்றான். அவன் பின்னே ஒருவயதான கிழவன். கிழவனின் தலையிலே ஒரு "தளநார்" கொழுவப்பட்டிருந்தது. ஊன்றிக் கவனித்ததன் பின்னர் தான் அது தேங்காய் பிடுங்கும் கந்தனும், மகனும் என்பது என் நினைவிற்கு வந்தது.

குசினியில் அலுவலாய் இருந்த என்மனைவிக்கு கந்தனும் அவர் மகனும் தேங்காய் பிடுங்க வந்திருக்கும் சேதியை என் மகன் மூலம் தெரியப்படுத்தினேன்.

"என்னங்கோ !"

குசினியில் இருந்து பலத்த குரலில் அழைப்பு விட்டாள் பத்தினி. எழுந்து குசினிக்குள் சென்றேன்.

"சமையலுக்குத் தேங்காய் ஒண்டும் இல்லையப்பா. நல்ல வேளை கந்தன் வந்தது. பின் வளவுக்கை கூட்டிக்கொண்டு போய்ப்பார்த்துந லுமரத்தில எண்டாலும் புடுங்குவியுங்கோ" எனக்கிருக்கிற அவசர வேலையுக்க இவள்பாவி நேரகாலந் தெரியாமல் இப்ப வேலை சொல்கின்றாள்... என்று சொல்லுவோமா விடுவோமா என்று தீர்மானிப்பதற்குள் "என்னப்பா யோசிக்கிறியள் ... எனக்குக் கையில அலுவல்; கறி அடுப்பில கொதிக்குது..."

அவலப்பட்டாள் மனைவி

"அம்மா ! அம்மா ..!!" மீண்டும் வாயிலில் சிறுவனின் குரல் ஒலித்தது.

"போங்கோ"... மனைவி முடிவாகச் சொல்லிவிட்டாள் கேற்றைத் திறந்து இருவரையும் உள்ளே அழைத்தேன். நாய்உறுமியபடி அவர்கள் இருவரையும் நோட்டம் விட்டது. எனது சைகையின் பின் ஒருவாறு அடங்கியது. பின்வளவுக்குள் இருவரையும் அழைத்து வந்து "அப்பு இதுக்குள்ள நிக்கிற மரத்தில பாத்து கிடக்கிற தேங்காயளப் புடுங்குங்கோ..."

வீழ்ந்திருந்த ஒரு தென்னை மரததின் மீது நான் இருந்து கொண்டு அவர்கள் இருவரையும் கவனித்தேன்.

சிறவன் எல்லா மரங்களையும் அண்ணாந்து பார்க்கின்றான். கந்தன தன் வெற்றிலைச் சரையை எடுத்து வெற்றிலைத் துவையலைச் சுவைக்கின்றார்.

**நடராசா இராமநாதன்**

"ஐயா, நாலு மரத்திலை தான காய்கிடக்கு"

"சரி சரி, கிடக்கிறதைப் புடுங்குங்கோ..."

சிறுவன், தகப்பனுக்குக் கிட்டே சென்று தேங்காய் பிடுங்க வேண்டிய மரங்களின் எண்ணிக்கையைக் கூறி விட்டு அவரை அழைத்துச் சென்று ஏறவேண்டிய மரத்தைக் காட்டுகின்றான்.

"தம்பி இஞ்சால வாரும். தேங்காய் தலையில விழுந்தாலும்" மெல்லிதாகச் சிரித்துக் கொண்டே வந்தான் சிறுவன். கிழவன் மெல்ல மெல்ல உயர்ந்து கொண்டே போகிறார்; மரத்தில்தான்.

ஒட்டிய அவர் வயிறும் உலர்ந்த அவர்தோற்றமும் என் கண் முன்னே பல கோலங்களைப் போடுகின்றன. அவர்களின் அன்றாட வாழ்க்கைகள் எப்படி இருக்குமென என்னால் யூகிக்கக்கூடியதாகஇருந்தது.

"என்னதம்பி நீர் பள்ளிக்கூடம் போறேல்லயா...?" இல்லை என்று பதில்வர தலை அசைக்கின்றான் சிறுவன்.

"ஏன் போறேல்ல... படிக்க விருப்பமில்லையோ..." அவன் முகம் சுருங்கிப்போனதை அவதானிக்கிறேன் கவலையின் ரேகைகள் கோடிட்டன அவன் முகத்தில். பெருமூச்சொன்றை நீளமாகவே விட்டான். சிறிது நேரம் மௌனம் நிலவியது.

"தொம்" தேங்காய் ஒன்று விழும் ஒலி மௌனத்தைக் கலைத்தது.

"என்னப்பா..! கண் தெரியாத கிழவன் முட்டுக்காய்களைப் புடுங்கிப் போடும், கவனமாய்ப் பாருங்கோ!" குசினிக்குள் இருந்து குரல்கொடுத்தாள் மனைவி, கண் தெரியாத கிழவன்! என்மனம் கிழவனுக்காகஅனுதாபப்பட்டது.

"தம்பி, நீங்கள் எத்தின பேர் சகோதரங்கள்?"

"நாலுபேர் "

'அண்ணன்மார்இருக்கோ ...

"இல்லைநான்தான்கடைசி. எனக்கு மூத்தது மூண்டும் அக்காமார் ..."

அவர்களது குடும்பத்தை இறுக்கும் நெரிக்கும் இரும்புச் சங்கிலிகள் எவை என்பதைப் புரிந்து கொண்டேன்.

'அக்காமார் கல்யாணம் செய்திட்டினமே"

"இல்லை மூத்தக்காவுக்கு முப்பத்திநாலு வயது. இன்னும் கல்யாணம் செய்யேல்ல .!!',

கந்தன்கீழேஇறங்கிவிட்டார் சிறுவன் ஓடிச்சென்று கைப்பிடியாய்ப் பிடித்து இரண்டாவது மரத்திற்கு அழைத்துச் செல்கின்றான்.

கந்தன் தன் தோளிலே இருந்த துவாய்த்துண்டால் தன் வியர்வைகளைத் துடைத்துக் கொள்கின்றார். அவரின் கைகால்கள் படபடவென்று துடிக்கின்றன. நிலத்திலே அமர்ந்து கொள்கின்றார்.

இளநீர் ஒன்றை வடிவாகச் சீவி கொத்திகிழவனுக்கு அருந்தக் கொடுக்கின்றான் சிறுவன்.

அரவாசி இளநீரைப் பருகிவிட்டு மீதியைச் சிறுவனிடம் கொடுக்கின்றார் கிழவன்,

பற்றும் பாசமும் அங்கே பரிமளிப்பதைப் பார்க்கின்றேன். கந்தன் இரண்டாவது மரத்திற்கு ஏறத் தயாராகின்றார். கண் தெரியாதபார்வை. மங்கிப்போன வயதான கிழவன். திருமணமாகாத, திருமணவயதைத் தாண்டிய அக்காமார். கல்வியைக் கற்க வேண்டிய வயதில் அதைத் தொடரமுடியாத நிலையில் தந்தைக்குத் துணையாகச் சென்றுதுவளும் சிறுவன்.

இவை மட்டுமா...?

வட்டும்வறுமையின்கோரப் பிடிக்குள் வதைபடும் இவர்கள் என்ன ஆற்றல் இல்லாதவர்களா...? கந்தன் அன்று தொட்டு இன்றுவரை தொழில் செய்யாது இருந்தாரா...? அவரது வாழ்வில் ஏன் ஒளி வீசவில்லை. துயரங்கள் ஏன் தொடர்கின்றன. அவனும் ஒரு தொழிலாளி தானே. தொழிலாளர், தொழிலாளர் என்று அன்று எழுந்த குரல்கள் இன்றும் எழுகின்றனவே. ஏன் கந்தனும் கந்தன் போன்றோரும் உயரவில்லை ..

என் மனம் நீண்டதோர் வரலாற்றைத் திருப்பிப் பார்க்க முனைந்தது. சிறுவன் தேங்காய்களைப் பொறுக்கிக் குவித்துக் கொண்டிருந்தான். அவனது துடிப்பும் செயலும் என்னைக் கவர்ந்தது.

என் மகன் ஓடி வந்தான்.

"அப்பா, எங்கட வாழை குட்டி போட்டிட்டுது." மகிழ்ச்சியால் அவன் துள்ளிவிட்டு மீண்டும் வாழைக்கன்றைப் பார்க்க ஓடிவிட்டான்.

நான்கு மரத்திலும் தேங்காய் பிடுங்கியாகிவிட்டது.

அவர்களுக்குரிய கூலிப்பணத்தை- நாற்பது ரூபாவைக் கொடுத்தேன்.

சிறுவன் தகப்பனைக் கையில் பிடித்தவாறே வெளியே அழைத்துச் செல்கின்றான்.

"ராசா... எவ்வளவு காசு கிடக்கு..." கிழவன்கேட்டார்.

"அறுபது ரூபா."

கிழவனுக்குத் தெரியும் இன்று ஆறு மரத்திலதான் தேங்காய் பிடுங்கியதென்று .. இருந்தாலும் முதல் வீட்டில் இரண்டு மரத்தில தேங்காய் பிடுங்கியதற்கு அந்த வீட்டுக்காரி கடன் சொன்னாளோ என்றொரு அவநம்பிக்கை அவர் மனதில் தோன்றியிருக்க வேண்டும் சிறுவன் தன் காற்சட்டைப்பைக்குள் இருந்த பணத்தைத் திரும்பவும் எண்ணிப் பார்த்தான். அறுபது ரூபாய் சரியாய் இருந்தது. இருவரும் போய்விட்டார்கள்.

தேங்காய்களைக் கடகம் ஒன்றினுள் பொறுக்கிக் கொண்டு வந்து கொட்டிலுக்குள் போட்டேன்.

என்மனம் ஏனோ அவர்கள் இருவரையும் எண்ணிக் கவலை கொண்டது.

பாவம்... ஓயாது உழைக்கின்ற கூட்டத்திற்கு ஏன்

வறுமை ........!

"என்னப்பா யோசிக்கிறியள் ... ... ... மனைவி தேங்காய்களை எண்ணியபடி கேட்டாள்.

"இல்லையப்பா, உந்தக் கந்தனையும், பெடியனையும் நினைக்க பாவமாய்க் கிடக்கப்பா... இனி உந்தக் காசைக் கொண்டு போய்த்தான் சமையல்..."

"அதுக்கென்னப்பா செய்யிறது, அவை அவையின்ர தலை எழுத்து. அப்பிடி எண்டா நாங்கள் என்ன செய்யிறது! ஏன் கந்தனுக்கு என்ன பெடியன் வளந்திட்டான் தானே, இனி அவனும் மரம் ஏறுவான் தானே."

அவர்களின் வறுமைக்கான- அதன்தீர்வுக்கான ஒரு காரணத்தைக் கண்டு பிடித்தவள் போல பிரஸ்தாபித்தாள் என் மனைவி...

அவை அவையின்ர தலை எழுத்து...!

எனக்கு என்னவோ போலிருந்தது.

"சுரண்டல்" என்றொரு வார்த்தையை அறியாதவள் தானே என் மனைவி. அவளுக்கெங்கே இவையெல்லாம் புரியும்?

"ம் காணும் யோசித்தது. போய்க் கையைக் கழுவிப் போட்டு வாருங்கோ சாப்பிட..."

சாப்பிடத் தயாரானேன். வாசலிலே மோட்டார் சைக்கிள் நிற்கும் ஒலி கேட்டது.

"கோர்ண்" ஒலியில் அது என் நண்பன் செந்தூரன் என்பதை உணர்ந்தேன்.

நான் கேற்றுக்குச் செல்லு முன்னமே அவன் கேற்றைத் திறந்து உள்ளே வந்துகொண்டிருந்தான் பின்னே அவனது பன்னிரண்டு வயதுச் சிறுவன் சிரித்தபடி.

இருவரும் உள்ளே வந்தனர்.

அவனது கையில் துடுப்பு (Cricket Bat) ஒன்றுஇருந்தது. வெள்ளை நிறத்திலே அரைக்காற்சட்டையும், "ரீ சேட்டும்", தலைக்குத் தொப்பியும் அணிந்து அவர்கள் வந்த கோலம் எங்கோ ஒரு "கிறிக்கற்" போட்டி ஒன்றை முடித்துவிட்டு வந்ததை நினைவூட்டியது.

"வாங்கோ, வாங்கோ... என்னஅப்பனும் பிள்ளையுமா எங்க "கிறிக்கற்' விளையாடி விட்டுவாறியள்போலகிடக்கு"

"ஓம் அங்கிள்-., உதில பக்கத்துக் கிறவுண்டில ஒரு ரூணமன்ற் அதுதான் மாச் முடிஞ்சு வாறம். நல்லமாச். எங்களுக்குத்தான் வெற்றி".

"ஆ.. கெட்டிக்காரன். நீரும் விளையாடினீரோ..."

'இல்லை. அப்பாதான் விளையாடினது. நான் பார்த்தனான். அப்பாதான் இண்டைக்கு கனக்க அடிச்சவர்." நண்பனுக்குப் பெருமை பிடிபடவில்லை...

'ராஜீ, நான் எத்தின 'ரண்' அடிச்சனான். அங்கிளுக்குச் சொல்லுங்கோ"

"'அறுபது' அங்கிள் அதுக்குள்ள மூன்றுசிக்சர்"

"ஆ..." நண்பனைக் கைலாகு கொடுத்து வாழ்த்தினேன். இதற்குள் மனைவி குளிர் பானத்துடன் வந்துவிட்டாள். இருவருக்கும் வழங்கிவிட்டு.

'அண்ண சாப்பாட்டு நேரம்வந்தனீங்கள். சாப்பிட்டு விட்டுத்தான் போகவேணும்" நண்பனைக் கேட்டாள் என் மனைவி.

"ஐயய்யோ .. என்னால இப்ப சாப்பிட ஏலாது. பாருங்கோஎங்களை ஒரேவேர்வை. அதோடை என்ர 'ஸ்கோரை, ப்பார்த்துஎங்கட பிளேயேர்ஸ் வாங்கித்தந்த 'சோடா' 'பிஸ்கற்' எல்லாம் வயித்த நிரப்பீட்டுது. 'சொறி' இன்னொரு நாளைக்கு வாறன் சாப்பிட..."

அவசரமாகப் புறப்படுகிறார்கள் நண்பனும் மகனும். நண்பனின் மகனைக் கொஞ்சிவிட்டு வழியனுப்பி வைக்கிறாள் எனமனைவி.

அறுவது ரூபா... கந்தனின் இன்றைய உழைப்பு. அறுபது "ரண்கள்" நண்பனின் இன்றைய சிறப்பு. இருவேறு உலகங்கள்...என்னால் ஜீரணிக்க முடியவில்லை.




(சி-6932)

# "அவர்கள் சுமப்பது விறகல்ல பாரச் சிலுவை"

மத்தியானப் பொழுதில் வல்லிபுரக் கோயில் மரநிழலில் கடற் காற்றுடன் கூடிய வெய்யில் வெதுவெதுப்பாக இருந்தது. விறகுச்சுமையுடன் சைக்கிள்களில் வரும் விறகு வியாபாரிகள் ஊர் திரும்புகின்ற வழியில் வல்லிபுரக் கோயில் மரநிழலில் ஒதுங்குவது கட்டாயமாகிப் போகின்றது. அவர்கள் ஊர் திரும்புகின்ற நேரம் அப்படி. தேரோடும் வீதிக்கப்பால் இரண்டு பலகாரக் கடைகள். எந்த ஒருகாரியத்துக்கும்-தண்ணீர், வெந்நீர் குடிக்கவோ, நிழலில் இளைப்பாறவோ வல்லிபுரக்கோயிலுக்குத்தான் அவர்கள் வரவேண்டியிருக்கிறது.

விறகு வியாபாரிகள், சைக்கிள்களைக் கண்ணுக்கெட்டிய தூரத்தில் மங்கிய நிழலில் நிறுத்தி வைத்துவிட்டு மரநிழலில் உட்கார்ந்தபடியே கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். மரவேரில் இருந்தபடியே பக்கத்திலிருந்தவரை இலேசாக அணுகி பேச்சுக் கொடுத்து. விறகு வியாபாரத்தைப் பற்றிக் கேட்டபோது:

1983க்கு முன்னர் தினசரி மேசன் வேலை கிடைக்கும். பல கட்டட வேலைகளும் நடைபெற்றன. அப்போதெல்லாம் ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டில் நிற்பதே பெரிதாக இருந்தது. 1983 ஜூலை மாதத்தில் திருக்கோணமலையில் ஏற்பட்ட தமிழர்களுக்கெதிரான வன்முறைக் கலவரத்தினால் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டு, எனது மனைவியின் ஊரான கம்பர்மலைக் கிராமத்துக்கு மூட்டை முடிச்சுக்களுடன் வந்து விட்டேன்.

கட்டட வேலையில் லாபத்தை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலை அப்போது வடமராட்சியில் இல்லை. நாளொன்றுக்கு 125 ரூபா வரை சம்பளம வாங்குகின்ற வேலை. எப்போதாவது ஒரு நாளைக்கு வேலை கிடைக்கும். மேசன் வேலையை நம்பி பிள்ளைகளுக்கு ஒரு நேரச் சாப்பாடு கூடப்போட முடியாத நிலை. வெட்டுகிறது, கொத்துகிறது. என்று தோட்டக் கூலிவேலைக்குப் போனேன். இந்தவேலையும்கொஞ்ச நாள்தான். என்னைப் போல் தொழில் இல்லாதவர்கள் எத்தனை பேர். அதிலும், சித்திரை, ஆடியில் தோட்டத்தில் கோடைப் பயிர் செய்தால் வேலை கிடையாது. சும்மா தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தால் அடுப்பில் பூனைதான் படுக்கும். அதனால் விறகுத்தொழிலில் நுழைய வேண்டியதாயிற்று. இந்தத் தொழிலுக்கு வேறு தொழில் போல் கைமூதல் தேவையில்லை. முதல் இல்லாத வியாபாரம் வீட்டிலுள்ள கத்தியும், கோடரியும் போதும் என்றார் தங்கராசா.

உச்சிப் பொழுதுக்கு மேலாகிச் சூரியனும் மேற்குப் பக்கம் சாயத் தொடங்கினான். சோம்பல் முறிப்பது போல் நிமிர்ந்து அமர்ந்து கொண்டார் வல்லிபுரம் தங்கராசா. சுமார் 45 வயது மதிக்கக் கூடிய தோற்றம். பிறப்பு வளர்ப்பு எல்லாம் திருக்கோணமலைதான். கம்பர்மலை செம்பாட்டில் திருமணம் செய்துகொண்ட தங்கராசாவுக்கு ஆறு பிள்ளைகள். நான்கு பேர் பள்ளிக்கூடம் போகிறார்கள்.

தலையைக் கோதிவிட்டபடி அவர் சொன்னார்:

நாகர்கோயில், அம்பன், குடத்தனைக்காடுகளில் விறகு வெட்டுகிறேன் குடத்தனையில் தொடங்கினால் இந்தக் காடுஇயக்கச்சிக்கு அப்பால் பரந்து செல்கிறது. இந்தக் காடுதான் எங்கள் தொழிற்களம் என்றாலும் விறகுதேடி அதிக தூரம் போக முடியாது. எங்கள் சைக்கிள் ஓட்டமெல்லாம் சுமார் பதினைந்து, இருபது மைல்தான். பார்த்தால் போதும்; அந்தக் கஷ்டத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியும். விடியற்புறம் நான்கு மணியளவுக்கு வீட்டிலிருந்து ஆரம்பித்தால், நிலம் தெரிய வல்லிபுரக்கோயில் அடிக்கு வந்து சேர்ந்து விடுவேன். எங்களில் பன்னிரண்டு பேர். அவர்கள் வந்து சேர்ந்ததும் எமது காட்டுப் பயணம் ஆரம்பமாகும். ஒரு சாப்பாடு கட்டிக்கொண்டு போகிறேன். ஒரு வேளை சாப்பாடு. மறுவேளை பட்டினி என்றுகாலம் சக்கரமாய் ஓடுது. மதியம் திரும்ப விறகுச் சுமையுடன் கரையேறுகிறோம். சைக்கிள் ஓடிய களையில் வல்லிபுரக் கோயிலில் ஒரு தரிப்பிடம். பேக்கரி, வீடுகளுக்குஓடருக்குக் கொண்டு போகிற விறகை இடையில் நல்ல விலை கிடைத்தால் விற்று விடுவேன்.

தங்கராசா சொல்லிக் கொண்டிருக்கும் போதே மற்றவர்களும் பெருமிதமாய் வந்து பக்கத்தில் சுற்றிவர அமர்ந்தார்கள். எதிரே தெருவில் விறகுச் சுமையுடன் சயிக்கிளில் வந்தவரின் கையிலிருந்து இரத்தம் கசிந்து கட்டியிருந்த துணியை நனைத்துக் கொண்டிருந்தது. அது காலை காட்டில் விறகு வெட்டிய போது கத்தி வெட்டிய காயமாம்.

வெய்யிலும் பொசுக்கி எடுத்தது நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தார்.

பச்சை விறகு வெட்டக் கூடாது என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. அப்படிக் கொண்டு வந்தால் காவல் துறை பிடித்து விடும். உயிருள்ள பச்சை மரங்களைக் கொஞ்சம்கொஞ்சமாக வெட்டினால் காடு அழிந்து போகும். ஆனால் காட்டிற்குள் போய்ப் பார்க்க வேண்டும். பச்சை மரங்கள் வெட்டுகிறவர்கள் அடங்குறபாடாக இல்லை. ஊர் உறங்கும் நேரத்தில் ஈரப் பசையுள்ள மரங்களை அக்கம் பக்கத்துக் கிராமங்களில் உள்ளவர்களும் வெட்டி எடுத்து விடுகிறார்கள். கடலோரமாக மணற்தரையிலுள்ள நாவல், இண்ணியா மரங்களையும் வெட்டக்கூடாது என்று தடையுள்ளது.

தகுந்த பாதுகாப்பு இல்லாத தொழில் இது. கரடுமுரடான பாதையில் விறகுச் சுமையுடன் சைக்கிள் ஓடி வரும் போது சில வாகன ஓட்டிகள் மனிதநேயத்துடன் ஒதுங்கிப் போவதில்லை. ஒரு முறை, நெல்லியடி யூனியன் கட்டடத்துக்கு முன்னால் விறகுச் சுமையுடன் வந்த என்னை லொறி ஒன்று மோதி விட்டு நில்லாமல் கொள்ளாமல் பறந்துவிட்டது. ரியூஷனுக்குப் போன பிள்ளைகள் சத்தம் கேட்டு, என்னமோ ஏதோ என்று ஓடி வந்து என்னைக் காப்பாற்றினார்கள்.

நம்பிக்கையில்லாத தொழில் இது. எதுவும் நடக்கும்— இப்படி ஒருவர் அவர்.

விறகு வெட்ட நெஞ்சளவு நீரில், சில சமயங்களில் இறங்க வேண்டும். சேறும் சகதியுமான இடங்கள். சில சமயங்களில் விஷப் பாம்பு குறுக்கே வரும். நெல்லியடியில் சைக்கிள் விறகுக் கட்டில் இருந்த பாம்பு தீண்டி ஒருவர் உயிர் நீத்தார். பிற்பாரம் கட்டி. சைக்கிள் தூக்கி அடித்ததால் ஒருவர் மரணமான சம்பவமும் உண்டு. இவை தவிர, காட்டு வழியில் 'வழிப்பறிக் கொள்ளையர்' அட்டகாசம் வேறு. ஷேட்டும், லோங்ஸ்சும் போட்டவர்கள் எங்களை வழிமறித்து மடக்கி, மிரட்டி விறகுச் சுமையைக் கொள்ளை அடித்து விடுகிறார்கள். இவர்களை யாரும் கண்டுகொள்கிறார்கள்இல்லை அந்த இடங்கள்தான் எங்கள் குடும்பங்களுக்குச் சோறு போடுகிற இடம். அதனால் வீண் தொந்தரவுக்குப் போகாமல் தணிந்து போக வேண்டியுள்ளது. இது இப்படியிருக்க, பட்டமரத்தை அடிவேரிலிருந்து கிளப்பும் மட்டும் கண்டும் காணாதது போல் இருந்துவிட்டு. இது எங்கள் காடு. விறகுக்கட்டைகளை அரக்கக் கூடாது என்று குய்யோ முறையோ என்று சத்தம் போடுவார்கள்-இவ்வாறு கூறினார்.

விறகு வியாபாரத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் குடும்பச் செலவுகளுக்கு போதுமா என்று கேட்டபோது:-

பறந்து பறந்து பாடுபட்டாலும் படுக்கப்பாயில்லை என்பதுபோல் எங்கள் நிலை. மிகவும் கஷ்டம் என்று ஆரம்பித்தார் தங்கராசா.

ஒரு சுமை விறகை சராசரி 150 ரூபா முதல்175ரூபாவரை விற்கலாம் தேனீயாகப்பறந்து பறந்து உழைக்கமுடியாது. கிழமையில் நான்கு நாட்கள் தான் காட்டுக்குப் போகலாம். தினமும் போக உடம்பு இடம் தராது. குடும்பச்செலவு அதிகம் இலவசக் கல்வி என்று பேச்சுத் தான். கொப்பி, பென்சில் என்று எதற்கெடுத்தாலும் காசு. பிள்ளைகளின் மருந்துச் செலவு வேறு. மருந்துப் பொருள்கள் யானை விலை விற்கின்றன. காணி, பூமி இல்லாத வறுமைப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து பெண்கள் இப்போது விறகு வெட்ட வருகிறார்கள். அவர்கள் வயது 18க்கும் 20க்கும் இடையில் இருக்கலாம். நெல்லியடியிலிருந்து அம்பன் வரையில் காட்டு வழியில் சைக்கிள்களில் வருகிறார்கள் என்றால் பாருங்களேன். எல்லாம் வறுமை தான் காரணம். அல்லது வீட்டில் அடுப்பு எரியாது என்றார்.

சயிக்கிள் கம்பி ஒன்று ஒன்பது ரூபா. அதைப் பூட்ட இருபதுரூபா கூலி. விலை இறங்கி விட்டது என்று சும்மா சொல்லக் கூடாது. 1200ரூபா விற்ற பின்குடம்இப்போது 900ரூபா. கரடு முரடான பாதை. அடிக்கடி ரயர், ரியூப் மாற்ற வேண்டும். கிழமைக்குக் குறைந்தது 100 ரூபா சயிக்கிள் செலவுக்கு முடியும். இப்படி இன்னொருவர்.


கூட்டம் கூடிக் கட்டடத் தொழிலாளர்சங்கம்அமைத்து நிவாரணம்கேட்டோம். அரிசி, மா, பருப்பு, சீனி என்று மாதம் 400 ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்கள் தந்தார்கள். இப்போது கையை விரித்து விட்டார்கள் மூன்றுமாதங்களாகியும் நிவாரணம்என்றபேச்சே இல்லை விதானையாரைக் கேட்டால், வந்தால் அறிவிக்கிறோம் என்கிறார். அவரைக் குறை சொல்லிப் பயனில்லை. வீணாக விதானையாருக்குக் கரைச்சல் தரக்கூடாது என்று நாம் அவர் பக்கம் போவதேயில்லை என்கிறார் தங்கராசா.

பொழுது சாயும் நேரம் நெருங்கியது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த விறகு வியாபாரிகள் நகர ஆரம்பித்தார்கள். மணலில் கால்கள் பின்னிக்கொண்டன. காற்றுப் பலமாகியது. எதிர்க் காற்றோ காற்று வளமோ எப்படியிருந்தாலும் சைக்கிளில் ஏறி ஓடமுடியாது. பாரம் சைக்கிளைச் சரித்தது. சயிக்கில்களை உருட்டினார்கள்.

எங்களின் கதையை உங்கள் பேப்பரில் போடுங்கள். நேரமாகிறது வருகிறோம் என்று விடை பெற்றார்கள்.


அவர்கள் சுமப்பது விறல்ல, அது 'பாரச்சிலுவை' என்றார் பக்கத்தில் நின்ற வழிப்போக்கர்.

தூரத்தில் விறகுவியாபாரிகளின் உருவம் மங்கலாய்க் கரைந்து போவது தெரிகிறது. அவர்களும் அஸ்தமனமாகிறார்கள்.



அண்மைக்காலமாக இராணுவ நிர்ப்பந்தத்தினால் அன்றாடம் தமது ஜீவனோபாயத்துக்கு உழைப்பவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது பொருளாதார அஸ்திவாரம் அசைக்கப்பட்டு விட்டது. இந்த மாறிய சூழ்நிலையில் பல குடும்பங்களின் வயிற்றுக்குச் சோறு போடும் தொழிலாக உள்ளது இந்த விறகு வியாபாரம்.

**சந்திப்பு: மதன்**


ரேஸ்ரியின் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுவதற்கான நிபந்தனைகள்:-

பியர், ஜாம் அல்லது கோடியல் போத்தல்களில் ஏதாவது ஐந்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தையும் அதற்குரிய அதிர்ஷ்டலாப சீட்டையும் பெற்றுக்கொள்ளவும். ஒவ்வொரு குலுக்கலும் மாதாந்த முடிவில் நடைபெறும்.

1 ஆம் பரிசு – சுவர்க்கடிகாரம்

2 ஆம் பரிசு – எவர் சில்வர் வீட்டுப் பாவனைப்பொருள்கள்.

8 ஆம் பரிசு - மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்.

மேலும் பத்து ஆறுதல் பரிசுகள்

போத்தல்கள் ஒப்படைக்கவேண்டிய இடங்கள்:-

(1) ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட் 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம் (2) அறிவகம்-சாவகச்சேரி (3)சுபாஸ் பேக்கவுஸ்-நெல்லியடி(4)பேரம்பலம் அன்சன்ஸ் சுன்னாகம் (5) சித்தி விநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு (6) சபாரிஸ் சுண்டுக்குளி (7) நீதினி Q சுன்னாகம் (8) செ. சுரேஸ் சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கு மானிப்பாய் (9) ஸ்கந்தா மாஸ்ரர் சங்கரத்தை சந்தி வட்டுக்கோட்டை (10) இ. இராசதுரை பத்திரிகை விற்பனை நிலையம் இருபாலை சந்தி. (11) விஸ்கம் கூல் பார் மானிப்பாய். (12) கந்தசாமி அன்சன் சங்கானை.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-6768)

# தோட்டாவில் இருந்து விமானம்வரை; ஆயுத கொள்வனவில் தரகுப் பணம்

வடக்கு-கிழக்கு யுத்தம் நீடித்துக் கொண்டேபோகும் இன்றைய நிலையில் பாதுகாப்புத் தொடர்பான உயர் அதிகாரிகளின் ஊழல்களும் குழறுபடிகளும் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன. தோட்டாவிலிருந்து விமானம்வரை கொள்வனவு செய்யப்படும்போது பெருமளவு தரகுப் பணத்தைப் பெறுவதற்காக நாட்டின் செல்வத்தைச் சுரண்டியவர்களின் கதைகள் வெளிவருகிறன.

''பாதுகாப்புப்படையினருக்குத் தேவையான உபகரணங்கள் தரமானதும், பொருத்தமானதும் மலிவானதுமானபொருள்களைத்தெரிவுசெய்வதுஆகும். ஆனால் கடந்த காலங்களில் இவ்வாறு செய்யப்படவில்லை என்பதை தற்போது கிடைத்துள்ள தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. இந் நடைமுறைகள் எவையும் கருத்திற்கொள்ளப்படவில்லை.

வை-8 ரக விமானக் கொள்வனவு தொடர்பாக நடைபெற்றது என்ன? உண்மையில் சீனத்தயாரிப்பானஇந்த விமானத்தைக் கொள்வனவு செய்ய பயன்படுத்தப்பட்ட பணத்தின் மூலம் முறையாக கேள் ... ஒப்பந்தம் செய்து கொண்டது.

ஆனால் கொள்வனவு செய்யப்பட்ட எம்.ஐ.8 ரக உலங்கு வானூர்திகளைப் பரீட்சித்துப் பார்க்க ரஷ்யா சென்ற தொழில்நுட்ப நிபுணர் குழுவினர் இவை பயனற்றவை என கூறிவிட்டனர். இதனால் எம். ஐ-8 உலங்குவானூர்தி கொள்வனவுஇடைநிறுத்தப்பட்டது. தொடர்ந்து எந்தப் பரிசீலனையும் இன்றி எம். ஐ-7 உலங்கு வானூர்தி கொள்வனவு செய்யப்பட்டது.

தற்போது அநுரத ராணுவ முகாமிற்கு வெளியே கட்டைவத்தினர் முறையிடுகின்றனர். மேலும் இதிலுள்ள இயந்திரத் துப்பாக்கிகளுக்கு ரவைகளை நிரப்புவது சிரமமான காரியம் என அவர்கள் கூறுகின்றனர்.

ஜெனரல் சிறில் ரணதுங்க தனது பதவிக் காலத்துக்கு முன்னர் கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தங்களை ரத்துச் செய்ததோடு, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் 19 ஆம் திகதியும் இவர் சில கூறுவிலைகளை விலைகள் கோரப்பட்டன சில நாட்களில் இனம் தெரியாத சில தொழில்நுட்பவியலாளர்கள் இவ்விமானங்களைப்பற்றி குறைகூறியதால் இந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. பின்னர் வேறுவிமானங்கள் கொள்வனவுசெய்வது தொடர்பான கதைகள் ஆரம்பமாகின. இதுவே ''புக்காரா'' தொடர்பான சரித்திரம் ஆகும்

மிகக் குறுகிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு கோரப்பட்ட கேள்விப்பத்திர முடிவு திகதி பின்னர் வேறு எதிர்பார்ப்புகளின் காரணமாக சிறிது காலம் நீடிக்கப்பட்டது. இதன் போது இத்தாலிய ''ஒகஸ்டா

களைப் பெருமளவு அந்நியச் செலாவணியில் கொள்வனவு செய்யும்போது அவை இராணுவத் தேவைகளுக்கு ஏற்றவாறு அல்ல உயரதிகாரி ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய தரகுப் பணத்தின் அடிப்படையிலேயே'' எனத் தீர்மானிப்பதற்கான தகவல்கள் தற்பொழுது கிடைத்துள்ளன. இதுவே உண்மையும் கூட.

முப்படைகளுக்கும் தேவையான யுத்தத் தளபாடங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்யப்படும்போது கேள்விப் பத்திரங்கள் கோரப்படுவது சாதாரண நடைமுறை. இவ்வாறு சிறிலங்கா படைகளுககு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்களைக்கோருவதற்குப் பொறுப்பானவராக இருந்தவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க ஆவார். இதற்குச் செயலாளராகக் கடமையாற்றியவர் மந்திரி சபையால் நியமிக்கப்பட்ட பிரிகேடியர் எலபான. இவரின் வேலை கேள்விப் பத்திரங்களை ஆராய்ந்து விப்பத்திரங்கள் கோரப்பட்டிருப்பின் இதற்கு சமனான சேவையில் ஈடுபடுத்தக்கூடிய வேறு சிறந்த நவீன ரகவிமானங்களைக் கொள்வனவு செய்திருக்கமுடியும் என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் எம்.ஐ-8 ரக உலங்கு வானூர்தி கொள்வனவு செய்யமுன்னர் எம். ஐ.07ரக இருபத்திரண்டு உலங்குவானூர்திகளுக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டன. இதற்கு சீனாவின் ''சின்பிதாசி'', சிங்கப்பூர் 'செம்பாவா', ரஷ்ய தூதுவராலயம் ஊடாக''இன்டெராகு''. பிரிட்டனின் ''க்லோவா இன்ரநாசனல்'', அவுஸ்ரேலியாவின் ''ரேன்ச் அவுஸ்ரேலியா'' என்பன கேள்விப்பத்திரங்களை அனுப்பி வைத்தன. ஆனால் இறுதியில் எம். ஐ-8 உலங்கு வானூர்திகள் கொள்வனவு செய்ய முடிவானது. ரஷ்ய நிறுவனமான ''கொலாரியஸ் கோப்பரேஷன்'' இதற்காக ரூபாவில் கொடுக்கல் வாங்கல் செய்ய யில் ஏற்றப்பட்டுள்ள ரி-85 கவசவாகனங்களின் கொள்வனவுச் சம்பவங்கள் சுவாரசியமானவை.

ஜெனரல் சிறில் ரணதுங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பதவி ஏற்ற காலத்தில் இந்த கவசவாகனங்களைக் கொள்வனவு செய்வதில் விசேட கவனம் செலுத்தினார். இவை சீன 'நோரின்கோ'' நிறுவனத்தினூடாக கொள்வனவு செய்யப்பட்டன.

ஒரு பக்கத்திற்கு ஐந்து சில்லுகளைக் கொண்ட ரி-85 கனரக கவசவாகனங்களின் தயாரிப்பு 1961 ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டது. எரிபொருளாக டீசல் பயன்படுத்துவதற்கு வசதியாக பி. எவ். 8 எல். 413 எவ். இயந்திரத் தொகுதி மேலதிகமாகப் பொருத்தப்பட்டது. இதன் நடுப்பகுதியும், மேற்பகுதியும் கீழ்ப் பகுதியுடன் தொடர்பற்றது. இது நீண்ட சதுப்புப் பகுதியில் பயணம் செய்யும் போது நடுப்பகுதிக்குள் நீர் புகுந்து விடுவதாக இராணுரத்துச் செய்தார் எனவும் இதில் பொலிசாருக்குத்தேவையான 3000 ரி56 ரக துப்பாக்கிகளும், இராணுவத்துக்குத் தேவையான நிலக்கண்ணி வெடிகள், கைக்குண்டுகள், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் (சி. எஸ் இனம்) 17.62X39 மி மீ ரவைகள்,இரவு பார்வை வெளிச்சக் குண்டுகள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது இவைகளைபெரிய அளவில் பெற்றுக் கொள்ள கூறுவிலைகள் கோரப்பட்டன. இக்கூறுவிலைகளைரத்துச்செய்யுமாறு சிறில் ரணதுங்க விசேட அறிவுறுத்தல்களை விடுத்திருந்தார் எனவும் இவற்றிற்கு பதிலாக சீனாவிலுள்ள 'நொறிங்ரோ' நிறுவனத்திடம் கொள்வனவு செய்யப்பட்டது.

'நொறிங்ரோ' வின் பிரதிநிதிகள் இலங்கையில் இல்லாமையால் சிறில் ரணதுங்கவையே இந் நிறுவனம் பிரதிநிதியாககடமையாற்ற பணித்தது எனவும், அவர் தனது அதிகாரத்தைமுழு அளவில் பயன்படுத்திபொலிஸ், இராணுவத்துக்கு தேவையான பெருமளவு பொருள்களை கொள்வனவு செய்தார் எனவும், இதன் மூலம் பெருமளவு பணத்தைப் பெற்றுக்கொண்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிஓ' நிறுவனத்தின் 'சியாமா செட்டி' விமானமும், பிரேசில் ''எம்பியர்'' நிறுவன 'டுகானே' விமானம், ருமேனியா ''றோம் டேக்னா'' நிறுவனத்தின் ''ஐ ஏ ஆர் 99'' இன விமானமும கவனத்தில் எடுக்கப்பட்டன. இறுதியில்புக்காராகுண்டுவீச்சு விமானம் கொள்வனவு செய்ய முடிவெடுக்கப்பட்டது.

விமானக் கொள்வனவு குறித்து கோரப்பட்ட கேள்விப் பத்திரங்களில் இரண்டு நிபந்தனைகள் விதிக்கப்படடதாக இராணுவவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முதலாவது இதற்கான உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும்; இரண்டாவது அடுத்த 15வருடங்களுக்கு இவ்விமானங்கள் உற்பத்தி செய்யக்கூடிய சாத்திபக் கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும்.

ஆனால் ஆர்ஜன்ரீனாவின் ''புக்காரா'' விமானத்தின் உற்பத்தி நிறுத்தப்பட்டுவிட்டது. மேலும் இதன்இயந்திரத் தொகுதி பிரான்சில் தயாரிக்கப்பட்டது. அதன்உதிரிப்பாகங்கள் பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சென்றஆண்டு நவம்பர்மாதம் சிறிலங்காவிற்கு வந்த ஆசி

**நன்றி: லக்திவ**
**மொழியாக்கம்: ம. நிமலராஜன்**

சில வருடங்களுக்கு முன்னர் பொலிசாருக்கென கொள்வனவு செய்யப்பட்ட ரி 84 எச் ரக துப்பாக்கிகளுக்கும் ரி 81 துப்பாக்கிகளுக்கு மட்டும் 6.5 கோடி ரூபாவை ஜெனரல் சிறில் ரணதுங்க கமிசனாக பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு இவர் பாரிய கமிஷனைப் பெற்றுக் கொண்டமை குறித்து இராணுவ உயர் அதிகாரிகள் மத்தியில் கசப்பு நிலவியதாகவும் ஆனால் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவிடமிருந்த அச்சத்தினாலேயே இவை வெளிவரவில்லை.

புக்காரா விமானக் கொள்வனவின்போது இடம்பெற்ற சம்பவங்கள் சிலவும் வெளிவந்துள்ளன. சென்ற வருடம் ஜூலை மாதம் பிரேசில் 'எட்பியர்'' நிறுவனத்திடமிருந்து ஆறு 'டுகானே'' விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஜனாதிபதியின் செயலாளரின் தொலைபேசிக் கட்டளை மூலம் இரத்துச் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

பின்னர் 1992செப்டெம்பர் 16ஆம் திகதி மீண்டும் கூறு யான் அமைப்பின் பிரதிநிதிகள் இராணுவஅமைப்புக்கான உதவிகளைத் தாம் பெற்றுத் தருவதாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவிற்கு உறுதியளித்தனர். இந்த உறுதியின் அடிப்படையில், சிறிலங்காவிற்கு வேண்டிய விமானங்கள், கவசவாகனங்கள், துப்பாக்கிகள், ரவைகள், வெடிமருந்துகள் என்பவற்றைநீண்டகாலகடன் அடிப்படையில்பெற்றுக்கொடுக்க பிரேமதாசவினால்வேண்டுகோள்விடுக்கப்பட்டது. நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இத்தொகையை வட்டியில்லாக் கடனாக வழங்க அவ் அமைப்பு சம்மதிக்காமையால் இம்முயற்சி கைவிடப்பட்டது.

ரூபாக்கணக்கில் வட்டிசெலுத்தத்தயங்கியவர்கள் டொலர் கணக்கில் தரகுப்பணத்தைப் பெற்றுக்கொண்டனர் இதுவா தேசபக்தி? கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக ஹெரோயின் போதைவஸ்து விற்பவர்களிலும் மோசமான ஐ.தே.க வியாபாரிகளாலேயே யுத்தம் கையாளப்பட்டுவருகிறது. டி.பி. விஜயதுங்க இதனை எவ்வாறு கையாளப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## கருப்புலிகள் நினைவாக ஒரு பாடல்

இங்குவந்து பிறந்த பின்பே
இருந்த இடம் தெரியும் – நாளை
சென்றுவிடும் தேதி சொல்ல
இங்கெவரால் முடியும்?

வாழ்க்கை என்னும் பயணம – இதை
மாற்றிடவா முடியும்?

பூமியிலே... சாகும்தேதி யாருக்கிங்கு தெரியும் – கரும்
புலிகளுக்கு மட்டும்தானே போகும்தேதி புரியும்
சாமிகளும் வாழ்த்திவிடும் சரித்திரங்கள் இவர்கள் - தமிழ்
சந்ததியில் அழியாத சத்தியத்தின் சுவர்கள்.

வாழ்வினிலே... வசந்தகாலம் துறந்தவர்கள் சிலரே – தினம்
வாசலிலே... இளமை ராகம் மறந்தவர்கள் சிலரே
கரும்புலிகள் விரும்பியிங்கு இருப்பிழந்து போவார் - எங்கள்
கண்ணெதிரே நின்றபின்னர் உருக்குலைந்து போவார்.

தோளிலேற்றிப் போவதற்கு நாலுபேர்கள் வேண்டும் – இந்த
தோள்களின்றிக் கரும்புலியைத் தீயின்வாய்கள் தீண்டும்
வாழும் காலம் நீள்வதிலே வந்திடுமா பெருமை – இல்லை
வாய்கள் நூறு வாழ்த்துப்பாடச் சாவதுதான் பெருமை.

அச்சமின்றிக் குண்டணைத்து ஆடிப்பாடிப் போவார் – எங்கள்
அண்ணன் பெயர் சொல்லிச் சொல்லி கரும்புலிகள் சாவார்
சக்கைவண்டி தன்னிலேறிச் சரித்திரங்கள் போவார் – தமிழ்
சந்ததியின் வாழ்வுக்காகத் தங்களுயிர் ஈவார்.

– புதுவை இரத்தினதுரை

# பொது அறிவித்தல்

## யாழ்ப்பாண மாநகரசபை

### நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவகால தற்காலிகக்கடைகள்

1993-ம் ஆண்டு நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின்போது தற்காலிக கடை களை அமைக்க விருப்புவோர் பின்வருவனவற்றைக் கடைப் பிடிக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்:-

1. தனியார் காணியில் தற்காலிக கடை அமைத்து வியாபாரம் செய்ய விரும்புவோர் 15-7-93 க்கு முன்னர் யாழ் மாநகரசபையின் நானாவித இறை வரிக் கிளையில் உரிய படிவங்களைப் பெற்று விண் ணப்பித்தல் வேண்டும்.
2. அவ்வாறு தனியார் காணியில் வியாபாரம் செய்ய விண்ணப்பிப்பவர்கள் அக்காணி உரிமையாளரின் சம்மதக் கடிதத்தையும் இணைக்க வேண்டும்.
3. தற்காலிக கடை அமைப்புகளுக்கு யாழ் மாநகர சபை திட்டமிடல் பிரிவில் உரிய விண்ணப்பம் பெற்று அனுமதி பெறுதல் வேண்டும்.

மேற்குறித்த நிபந்தனைகளை 16-7-93 க்கு முன் பூர்த்தி செய்ய தவறுபவர்கள் உற்சவ காலத்தில் தற் காலிக கடை அமைத்து வியாபாரம் செய்ய அனுமதிக் கப்படமாட்டார்கள்.

முக்கிய குறிப்பு:

எக்காரணம் கொண்டும் திருவிழாக்கால தற் காலிக கடைகளை தெருவோரங்களில் அமைப்பது அனுமதிக்கப்படமாட்டாது.

மாநகர ஆணையாளர்.

1993-06-30. யாழ்ப்பாணம்.

(சி-6934)

## நீங்காத நினைவு

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் தேனுஜா

(சிவலிங்கம் மதனிகா)

[வேவுப்படைப் பெண்புலி]

தாயின் மடியில்: 12.03.1971 — தமிழின் அடியில்: 14.07.1992

திதி: 03. 07. 1993

தமிழீழ தேசத்தின் விதையாகினாய்
தலைவரீந்து தமிழ்காத்த புகழாகினாய்
தம்பநற் சேனைக்குத் தலையாகினாய்
தமிழீழப் பெண்ணுக்கு வழிகாட்டினாய்
உயிரே எம் உறவே யுள்ளுணர்வே யுனை
உலகத்தி லினிமேல் நாம் காண்டல் எப்போ?
பயிரேநற் பண்பேயெம் புலி தேனுஜா
படைவெல்லும் பழிகொல்லும் உன்பேர் வென்றிடும்.

03. 07. 93 (சனிக்கிழமை) நாளை எமது இல்லத்தில் நடைபெறும் 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியில் சக போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

1-ம் கட்டை,
வல்லைவீதி,
தொண்டமனாறு.

-அன்புக் குடும்பத்தினர்

(5251)

## கரும்புலிகள்

என்ற பாடலும், வேறு மூன்று பாடல்களுமாக நான்கு பாடல்கள் அமைகின்றன. ஒன்பதாவது பாடல், சென்றகரும்புலிகள் மீண்டு வந்து சேதி சொல்வதாக அமைகிறது.

''காற்றாகி வந்தோம் கடலாகி வந்தோம்
காதோரம் ஒருசேதி சொல்வோம்-கரும்
புலியாகி நின்றோம்புயலாகி வென்றோம்
புரியாத புதிராகிச் சென்றோம்''

என்று உரையிலே சொல்லி,

''எம்மை நினைத்து யாரும் கலங்கக்
கூடாது - இனி
இங்கே மலரும் சின்னப் பூக்கள் வாடாது

என்று பாடலாக, தம்மை இழந்து நிற்பவர்களுக்கு ஆறுதல் மொழியும், தம்முடைய தற்கொடையின் பயன் என்ன என்பதையும் அக் கரும்புலிகளே கூறுகின்றனர். ''புரியாத புதிராகச்'' சென்ற கரும்புலிகள் இம்மண்ணிலே மீண்டும் வந்தால் என்ன சொல்வார்கள் எனப் பாடலாசிரியர் கற்பனை பண்ணுகிறார்.

பாடல்கள் எல்லாமே உணர்வுமிகு கவிதைகளாகவே உள்ளன. இக்கவிதைகளை இசைப் பாடல்களாக்கியமை பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டதுபோல் உள்ளது. பாடல் ஒவ்வொன்றும் புலப்படுத்தும் உணர்வு, சித்திரிக்கும் செயற்பாடு ஆகியனவற்றுக்கேற்ற இசை அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. கவிதையை வியப்பதா, இசையை வியப்பதா என்றொரு நிலை. இரண்டுமே சங்கமமாகிப் பிரவாகிக்கின்றன. 'சாவைத் தம் தோள்மீது தாங்கிய, காவிய சந்தனமேனிகளே'' என்னும் பாடலில் ஒவ்வொரு சரணமும் முடிய இடம்பெறும் இசை, கரும்புலி ஒருவனோ / ஒருத்தியோ இலக்குநோக்கி வண்டி ஒன்றிலே செல்வது போன்ற ஒரு பிரமையினை ஏற்படுத்துகின்றது. ''தலைகள் குனியும் நிலையில் இங்கே புலிகள் இல்லையடா'' என்னும் பாடலின் இசை படையியங்கு அரவத்தினைத் தொனிக்கின்றது. 'நீங்கள் முன்னே செல்லுங்கள் நான் பின்னே வருகிறேன்'' என்று சொன்ன தலைவனுக்கும ஓரிரண்டு பேருக்கும் கேட்ட இந்த ''இயங்கரவம்'' ஊரும் உலகமும கேட்கும்படியாக இந்த இசை அமைந்து விடுகின்றது நெஞ்சைக்கவ்வும்சோகமும் நிமிர்ந்து நிற்கும துணிச்சலும், தலைவனிற்கொண்ட நம்பிக்கையும் சொற்களைகளாலும் கருவிகளிலே பிறக்கும் பல்சுவைத் தொனிகளாலும் அருமையாகப் புலப்படுத்தப்படுகின்றன. 'போரம்மா - உனையன்றி யாரம்மா'' என்னும் பாடலிலே நாட்டார் இசை நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வளவு வியத்தகு சாதனைகளான தற்கொடைகளைச் செய்திடும் கரும்புலிகள் நிழல்களாகத்தான் இருப்பினும், அவர்களும் எங்கள் தாய் தந்தையர் ஈன்றெடுத்தபிள்ளைகள்தான்; அவர்களும் உணர்வும குருதியும் சதையும் கொண்ட மனிதர்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

''கல்லுக்குள்ளே ஈரமுண்டு கசிவதுமுண்டு
கருமபுலிகள் விழிகளில் நீர் கசிவதுமுண்டு
அலலும் பகல் அண்ணன் பெயரை உச்
சரித்தீர்கள்
அந்தப் பெயர் சொல்லி மேனி பிச்செறிந்
தீர்கள்''

என்ற பாடல் வரிகள் அவ்வுண்மையினை எமக்கு நினைவூட்டுகின்றன.

இப்பாடல்களைப் பாடியவர்கள் பாடற் பொருளுணர்ந்து கரும்புலிகளின் உணர்வுகளை ஓரளவாவது உணர்ந்து கொண்டு பாடுகின்றார்கள். பாடற்புலவன் தன்னுடைய ஆக்கங்கள் இவர்களுடைய செந்தொண்டைவாய்கள் மூலம் உயிர்ப்புறுவதைக் கண்டு மகிழ்வான் என்பதில் ஐயமில்லை. ஆடல், உருகுதல் பெருமையுறுதல், உணர்வு பொங்குதல் விக்கித்தல், இவை எல்லாமே அவர்கள் குரல்களிலும் கருவிகளை மீட்டும் கைகளிலும் நடைபெறுகின்றன.

''கரும்புலிகள்'' ஒலிப்பதிவு நாடா தமிழ்ஈழ மக்களிடையே பலஉணர்வலைகளைத் தோற்றுவிக்கும் என்பதிலே ஐயமில்லை. கேட்பவர்கள் வியப்படைவர்; நெஞ்சம் துடிதுடிப்படைய நிற்பர்; மனத்துள்ளே ஆழ்வர்; புரியாத புதிராகச் சென்றவரைப் போற்றுவர். தமிழ் ஈழ இசை சென்ற ஆண்டு ''நெய்தல்'' காலாலே மேலானதொரு பாய்ச்சலைச் செய்தது. இந்த ஆண்டு ''கரும்புலிகள்'' காலாலே தமிழ்ஈழ இசை இன்னொருநெடும் பாய்ச்சலைச் செய்து சாதனை புரிந்துள்ளது.

### யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

### திருநெல்வேலி- யாழ்ப்பாணம்

எமது சங்கப் பிரதேச மன்றங்களின் பொதுக் கூட்டங்கள் பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறும் தயவுசெய்து சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திகதி: 04-07-1993 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சங்க மண்டபம், திருநெல்வேலி

| பிரதேச மன்றங்கள் | நேரம் |
|---|---|
| உடுவில் பிரதேச மன்றம் | காலை 9 30 |
| யாழ் பிரதேசமன்றம் | காலை 11 00 |
| கோப்பாய் பிரதேசமன்றம் | பி. ப. 2 00 |
| நல்லூர் பிரதேச மன்றம் | பி. ப. 3.00 |

நிகழ்ச்சி நிரல்:


1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
4. பிரதேச மன்றச் செயற்குழு உறுப்பினர் 09 பேரைத் தெரிவு செய்தல்
5. நன்றியுரை.

தலைவர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(சி-6940)

### ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)

### திரையரங்கில்




தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30மணி, மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6867)

# யுத்தகைதிகள் விடுதலை உடன்பாட்டு முறிவிற்கு காரணம் யார்?

போர்க் கைதிகள் விடுதலை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட உடன்பாட்டில் இருந்து இறுதி நேரத்தில் பின்வாங்கியுள்ளது. அதாவது இவ் விவகாரத்தில் இராஜதந்திர ரீதியாக ஏற்பட்ட தோல்வியின்விளைவாக உடன்பாட்டை முறித்துக் கொள்ளும் நிலைக்கு சிறிலங்கா அரசாங்கம் சென்றுள்ளது.

இவ் ஒப்பந்த முறிவிற்கு விடுதலைப்புலிகள் மேலதிக நிபந்தனைகளை முன் வைத்ததே காரணம்என சிறிலங்கா அரசு தரப்பு வெளிப்படையாகக் கூறிக்கொண்டாலும், அரசால் அதனை நிரூபிக்கமுடியவில்லை. இதனை இவ் விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திய பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவே வெளிப்படுத்தியுள்ளார். ''யுத்தக் கைதிகளை விடுவிக்க விடுதலைப்புலிகள் இயக்கம் புதிய நிபந்தனை எதையும் விதிக்கவில்லை. எனினும் வடக்கிற்குக் கொண்டு செல்லப்படும் பொருள்களின் அளவை அதிகரிக்குமாறே கோரினர்'' என அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனால், புலிகள் அரச திணைக்களங்கள் ஊடாக யாழ். குடாநாட்டிற்குதேவையான ஒரு மாதத்திற்குரிய பொருள்களை கோரியமையானது ஒரு உடன்பாட்டு மீறலாக பிரிகேடியர் வீரசேகரா குறிப்பிடவில்லை. ஏனெனில் அரசாங்கத் தரப்பு அதை ஒருஉடன்பாட்டு மீறலாக வியாக்கியானம் செய்யினும் அது ஒரு உடன்பாட்டு மீறலல்ல.

பேச்சுவார்த்தையின் போது விடுதலைப்புலிகளுடன்காணப்பட்ட உடன்பாட்டின் படி தடைநீக்கப்பட்ட பொருள்கள் எந்த அளவில் வடக்கிற்கு அனுப்பப்படும் என முடிவுஎதுவும் எடுக்கப்படவில்லை. தேவையான அளவில் அனுப்பி வைக்கப்படும் என்றே உடன்பாடு கூறுகின்றது. இவை பொருள்கள் மீதான தடை நீக்கப்பட்டதாக கூட்டுப்படை நடவடிக்கை தலைமைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்காகையொப்பம் இட்ட கடிதத்திலேயே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஏழு வகைப்பொருள்களில் மருந்துப்பொருள்கள் துவிச்சக்கரவண்டிகள், தீப்பெட்டி, பாடசாலை உபகரணங்கள், வானொலிபெட்டிகள் ஆகிய ஐந்து வகைப்பொருள்களுக்கு கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் எதுவித தடங்கலுமின்றி தேவையின் அளவில், விநியோகம் செய்ய அனுமதிக்கும் என்ற ரீதியில் தெளிவாகக்குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை பெற்றோல், டீசல், ஒயில் உட்பட எண்ணெய்வகைகள் என்பனவும், உரம் ஆகிய இருவகையான பொருள்களும் அரச அதிகாரியால் சிபார்சு செய்யப்படும் அளவிற்கு வழங்கப்படுவதற்கு கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் ஆட்சேபம் தெரிவிக்காது எனத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உடன்பாடு ...ற்பட்டபின்னர் வடபகுதிக்கு ...00 பீப்பா பெற்றோல், 500 பீப்பா டீசல், 100 பீப்பா ஒயில் 50 மெற்றிக் தொன் யூரியா என்பனவற்றைஅனுப்பி வைப்பதற்கான முடிவும், அதுவே கைதிகள் விடுதலைக்கான பொருள்களின் விநியோக அளவாக அளவிட்டுக் கொண்டதும் சிறிலங்கா அரசாங்கத்தின் ஒருதலைப்பட்சமான முடிவே ஒழிய, புலிகளுடனான உடன்பாட்டின் அடிப்படையில் காணப்பட்ட முடிவொன்றல்ல. ஆகையினால், இவ் அளவினை கைதிகள் விடுதலைக்கான பேரம் பேசப்பட்ட பொருள்களின் அளவாக அரசாங்கம் நிர்ணயம் செய்தமை தவறாகும்.

ஆகையினால் புலிகள் அரச திணைக்களங்கள் ஊடாக தேவையான பொருள்களின் பட்டியலை வெளியிட்டமையும் அதனை விநியோகிக்கக் கோரியமையும் ஓர் உடன்பாட்டு மீறலோ அன்றி, புதிய நிபந்தனையின் அடிப்படையிலானதோ அல்ல. ஆகையினால் இதனைக் காரணம்காட்டி உடன்பாட்டை முறித்துக் கொள்ள அரசாங்கம் முற்பட்டுள்ளமையானது அரசாங்கமே உடன்பாடு குறித்து புதிய நிபந்தனைகளைப் போட முற்பட்டுள்ளதெனலாம்.

சிறிலங்கா அரசாங்கம் பல்வேறு காரணங்கள். அழுத்தங்கள் என்பனவற்றால் இவ் உடன்பாட்டை முறித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் யுத்தக்கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கி ஆறுநாள்களுக்குப்பின், அவர்களின் பெற்றோர்கள் யாழ்ப்பாணம் வந்துவிட்ட நிலையில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட இராஜதந்திர- அரசியல் ரீதியான உடன்பாடாகவே இது இருந்தது.

இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கம் உடன்பாட்டை முறித்துக் கொள்ள எடுத்துக் கொண்ட தீர்மானமானதுசிறிலங்கா அரசாங்கத்திற்கு இராணுவத்தினரிடம் இருந்து எழுந்த அழுத்தமே என ஒருபகுதி அரசியல்விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இதில் உண்மை இல்லாமலும் இல்லை. உடன்பாட்டின் மூலம் ஏற்பட்ட பொருளாதாரத் தடை மீதான தளர்ச்சி பற்றிக்குறிப்பிட்ட யுத்த முனையில் சேவையிலுள்ள ஓர் இராணுவ அதிகாரி ''இராணுவ ரீதியாக விடுதலைப்புலிகள் நன்மை பெறும் திட்டம் எதையும் அனுமதிக்கப் போவதில்லை'' எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

அதாவது பொருளாதாரத் தடை தளர்ச்சியானது விடுதலைப் புலிகளை பலப்படுத்துவதை நாம்அனுமதிக்கப்போவதில்லை என்பதே அவர் கூற்றின் பொருளாகும். இது தனியாக அந்த இராணுவ அதிகாரியின் கருத்து என்பதை விட இராணுவத்திலுள்ள பெரும்பாலான அதிகாரிகளின் கருத்து என்றே கூறலாம். அதாவது வடபகுதி மீதான பொருளாதாரத் தடையானது இராணுவத்தின் மூலதந்திரோபாயத்தின் ஒரு பகுதியாகும். இதில் ஏற்படும் தளர்ச்சியானது இராணுவம் இதுவரை ஈட்டிய வெற்றிகளை இல்லாது செய்து விடும் என்பதோடு இராணுவத்தின் தந்திரோபாயங்களை ஆபத்திற்கு உள்ளாக்கிவிடும் என்பதுமே இராணுவத் தரப்பின் வாதமாகும்.

இதனால், கைதிகள் தொடர்பாக உடன்பாடு இராணுவத் தரப்பில் ஓர் அதிர்ச்சியூட்டும் சம்பவமாகவே இருந்தது. பெரும்பாலும், அரசியல்வாதிகளும் சிவில் அதிகாரிகளும் கலந்து கொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்டதாயினும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்ட போது, கூட்டுப்படை நடவடிக்கை தலைமை தளகர்த்தா ஹமில்டன் வனசிங்காவும், பொலிஸ்மா அதிபரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். இருப்பினும் உடன்பாடு குறித்து முடிவு மேற்கொள்ளப்பட்டபோது, இவர்களின் குரல்கள் பலமாக ஒலிக்கவில்லையோ அன்றி, அரசியல்வாதிகளால் அவை அமுக்கப்கப்பட்டனவோ என்பதுதெளிவாக தெரியவரவில்லை.

ஆனால், உடன்பாடு யுத்த முனைகளிலும் அதற்கு வெளியிலும் முன்னைய இராணுவ அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. வன்மையாக அவர்கள் அதனை எதிர்க்கத் தலைப்பட்டனர். இந்நிலையானது அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் ஒருநிலை உருவானபோதுஇராணுவத்தினன் கோரிக்கையை ஏற்று ஓரளவிற்கு பணிந்து செல்ல அரசாங்கம் தீர்மானித்தது.


இந்நிலையானது, சிறிலங்கா அரசியலில் இராணுவத்தின் பலத்தை காட்டும் ஒரு விடயமாகவே அமைந்தது. அரசாங்கம் இராணுவத்திற்குப் பணிந்துசென்றமையானது அடுத்து வரும் காலங்களில் இனப்பிரச்சினையில் மட்டுமல்ல, எந்த நெருக்கடியான விவகாரங்களிலும் இராணுவத்தை கலந்தாலோசிக்காமல் முடிவெடுப்பது இயலாத காரியம் என்பதை உலகிற்கு வெளிக்காட்டியுள்ளது.

**ஜெயராஜ்**

சிறிலங்கா இராணுவம் அரசியலில், தனது கையைப் பலப்படுத்திக் கொண்டமையானது இரண்டாம்கட்ட ஈழப்போரின் போது அரசாங்கம் செய்த இராணுவ விரிவாக்கத்துடன் தொடங்கியதாகும். ஆனால், இன்று அரசியல்வாதிகள்எதை கூறவேண்டும் எதைச் செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்கும் சக்தியாக இராணுவம் மாறி விட்டது. அதுவும், பலமான அரசியல் தலைமை இல்லாத நிலையில் இராணுவத்தின் போக்கானது கட்டுப்படுத்த முடியாத ஒன்றாகவே வளர்ந்து வருகின்றது.

ஆனால், கைதிகள் பரிமாற்றம் தொடர்பான உடன்பாடு குழப்பத்தில் முடிவடைந்ததற்கு தனியாக இராணுவ தரப்பின் ஒருபகுதியினர் தெரிவித்த எதிர்ப்பு மட்டுமல்ல. இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடித்து வரும் நிலையற்ற கொள்கையும் காரணமாகும், பொதுவில் அரசியல் தீர்வுபற்றிப் பேசும் சிறிலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்விற்கே ஊக்கம் கொடுத்து வருகின்றது. இந்நிலையில் இராணுவத்தின் போக்கிற்கு முரண்பாடாக அரசாங்கம் எவ்வித முடிவையும் எடுக்கப்போவதில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)




## இலக்கணம் தெரியும்

பொங்குகின்ற கடலலைக்குப்
பெருமை] வந்தது! -கரும்
புலிகள் தந்தது! - இங்கு
எங்களது தென்றலுக்குப்
புகழும் வாய்த்தது!- இதுவும்
இவர்கள் செய்தது!
ஒவ்வொரின்னலும் எமக்கு
வழியைக்காட்டுது!- புது
ஒளியைக் கூட்டுது! - எங்கள்
ஒவ்வொரிழப்பும் படகின்
ஓட்டியாகுது! - கரை
உண்மையானது!
புல்லரினைக் கொன்றிடவே
குண்டாகினார்!- உடல்
குண்டாக்கினார்!- ஒரு
கல்லறையைக் காணாது
தூளாகினார்! - நிலை
வாழ்வாகினார்!
பலரெங்கும் உயிருக்குப்
பயந்தோடுவார்! - தினம்
அவர்சாகுவார்! - இவர்
பலமான உரிமைக்கு
உயிருற்றுவார்!- தம்
புகழேற்றுவார்!
இறுதியாக இறுதியான
புன்னகை தருவீர்!-பின்
உறுதியில் விரைவீர்! - நீர்
உறுதியாக விரையும் வேளை
இதயமழுதிடும்! - அது
என்றுமழுதிடும்
நீங்கள்போய் வெடிப்பதென்ன
கனவுபோன்றது!-அது
நனவேயானது! - இங்கு
எங்களுக்கு உம்பிறப்பின்
பிறப்பது புரியும்! - அதன்
இலக்கணம் தெரியும்.
நாடுவிட்டு ஓடிப்பலர்
கேடுகொள்கிறார்! - இளமை
நாடி நிற்கிறார்! - இவர்
பாடுபட்டு, உயிர்சிதைத்து
நாடுகாண்கிறார்! - உயிரில்
பரணி பாடுறார்!
நெஞ்சினிலே உங்களது
நாமம் நிற்குது! - முகம்
நினைவைத்தட்டுது! - அது
மிஞ்சிமிஞ்சிக் கவிதையாக
நெருடுகின்றது! - எம்மை
மிஞ்சியோடுது!
எத்தனைவழி தனிலே
செத்திவர் போனார்! - புதுப்
புத்தகமானார்! - எம்
கத்துகடல் காற்றே இதைக்
கற்றுவையுங்கள்! - எதிர்
காலம் சொல்லுங்கள்!
தவியெனத்தவித்து நெஞ்சு
கவலையாகுது! - பின்
அகலமாகுது! - ஓர்
கவியினைநீ பாடு என்று
மனது சொல்லுது! - பின்
கவலை வெல்லுது.

- இளந்திரையன்

# இனப்பிரச்சினை தீர்விற்கு பொதுஇணக்கம் அவசியம்

## ஜெனரல் சேபால ஆட்டிக்கல

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினையை மிகவும் அவசரமான விவகாரமாகக்கருதி அதற்குத் தீர்வுகாண சகலஅரசியல்கட்சிகளும் பொது இணக்கத்திற்கு வரவேண்டும்என ஜனாதிபதியின் தேசியபாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் சேபால ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "பேச்சுவார்த்தை வழிமுறைகள் எந்தமார்க்கத்தில் செல்லுமென்று இப்பொழுது சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட இணக்கமில்லையென்றாலும் பொதுவான இணக்கமொன்று எந்தளவுக்கு விரைவாக மேற்கொள்ளப்படுகிறதுஎன்பதைப் பொறுத்தே இது அமைந்துள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக முன்னர் ஏற்பட்டிருந்த அபிவிருத்தி நிலைகளையும் இப்போதைய நிலைகளையும் நான் ஆராய்ந்து வருகிறேன். நிலைமைகுறித்து சரியான மதிப்பீடு ஒன்று விரைவில்காணப்படும். அநேகமாக இம்மாதநடுப்பகுதியில் இதுவெகுஜனத்தொடர்பு சாதனங்களுக்கு கிடைக்கலாம்'' என சேபால ஆட்டிகல குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஆனந்த வீரசேகராவின் யாழ்ப்பாண விஜயம் பற்றி கேட்கப்பட்ட போது "கைதிகளை விடுவிக்கவே அவர் யாழ்ப்பாணம் சென்றார். அதுமட்டுமே அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரம். ஆனால் தேசியப் பிரச்சினையாகிவிட்ட ஒரு விடயத்திற்கு தீர்வை காண்பதற்கான அறிவுறுத்தலை அரசுக்கு அளிக்கக்கூடிய செய்திகளை அவர் புலிகளிடமிருந்து கொண்டுவந்திருக்கலாம். அர்ப்பண சிந்தனையுடனும் மிக அவதானமாகவும் கையாளப்பட வேண்டிய ஒரு தேசியப் பிரச்சினை இதுவென்று வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இந்தக்கட்டத்தில் தேசிய வெகுஜனத்தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. பரந்த பரிமாணத்தில் சகல விடயங்களையும் மதிப்பீடு செய்து மெதுவாக செயற்பட வேண்டும் என நான் குறிப்பிடுகிறேன்'' என்றார் ஆட்டிகல.

### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 01-07-93


எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10166

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

4[illegible]-8445, 24-5036, 26-0048, 26-0375, 28-1414
24-9938, 41-9166.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-8631, 26-6983, 26-1949, 40-7584, 26-1169
27-7281, 24-1250, 24-8353, 27-4628, 26-5351
24-1259, 24-5121, 28-0364, 40-1516, 26-6075
27-5535, 41-0976, 40-2295, 24-9744, 24-4917


30-06-93 சீட்டிழுப்பில்

### பரிசுபெற்றோர் விபரம்

| இல. | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1ம் பரிசு 595 | செல்வி செல்வநாயகம் | 595, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| 2-ம் பரிசு 943 | சி. மேரிபிளவர் | 963/7, வலம்புரம், கொழும்புத்துறை |
| 3-ம் பரிசு 2197 | சி. குகன் | கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. |

ஆறுதல் பரிசுகள்:

1) 1711 த. சுவேந்திரன், மீசாலை தெற்கு, மீசாலை.
2) 2166 கெ. பரமகாஸ், மாலிசந்தி, கரவெட்டி.
3) 1771 எஸ் நரேந்திரன், சாவகச்சேரி.
4) 1065 ஜெ. சங்கரன், வல்வெட்டி, வல்வெட்டித்துறை
5) 2155 சு. தேவிகா, மாலிசந்தி, துன்னாலை தெற்கு, கரவெட்டி.
6) 1567 த. லக்ஸ்மன், இல. 9, கோவில் வீதி, யாழ்.
7) 1713 எஸ். தவச்செல்வம், மந்துவில், கொடிகாமம்.
8) 2210 பி. சிவசித்தம், நா.மு ஒழுங்கை பருத்தித்துறை
9) 1299 றொபின், அளவெட்டி.
10) 394 ரமணி, சுன்னாகம் மேற்கு. சுன்னாகம்.

(சி-6936)

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.


அணுசக்தி

மானது அல்லாவிடின் வானியல் நேரம் எமது கைக்கடிகார நேரத்திலிருந்து வேறுபட்டுவிடும் என அவ்விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்தனர். இந்தியாவின் நேரம் பேணும் அமைப்பாக தேசிய பௌதிக ஆய்வு கூடம் விளங்குகிறது. கடந்த வருடம் ஜூன் மாதத்திலும் இவ்வாய்வு கூட விஞ்ஞானிகள் ஒரு செக்கன் தாமதத்தை அறிவித்திருந்தனர்.

பாராளுமன்றம்

எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம் தெரிவித்தார்.

மற்றுமோர் எதிர்க்கட்சித் தலைவர் கருத்து வெளியிடுகையில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இவ் விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், அரசுடன் பேச்சு நடத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டார். விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைக் கொள்ளும்போது அரசு அவதானமாக நடந்து கொள்ளவேண்டும் என்றும் எதிரணி தலைவர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்போது புலிகள் போர்க்கைதிகளையும், அவர்களது உறவினர்களையும் தடுத்துவைத்திருப்பது அரசுக்கு விடுக்கப்பட்ட நேரடி அச்சுறுத்தலாகும் என எதிரணியினர் சுட்டிக்காட்டியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன

யுத்தக் கைதிகள்

சுருக்கமாகக் கூறின், சிறிலங்கா அரசாங்கம் வழமை போலவே போர்க் கைதிகள் விவகாரத்திலும் இரண்டுங்கெட்டான் நிலையிலேயே உள்ளது. தடை நீக்கப்பட்ட பொருள்களுடன் பருத்தித்துறை துறைமுகம் வந்தடைந்த 'றுகுணு' கப்பலின் நடவடிக்கையே இதனை விளக்கப் போதுமானதாய் இருக்கும். அரச அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் உள்ள இடைவெளியை இதன் மூலம் எவரும் புரிந்துகொள்ள முடியும்.

எது எவ்வாறு இருப்பினும் இவ் உடன்பாட்டில் இராஜதந்திர அரசியல் அணுகுமுறை முதன்மைப்படுத்தப்பட்டது. ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் இனப்பிரச்சினை குறித்த இராணுவ அணுகுமுறைக்கும் அதை நோக்கமாகக் கொண்டு வலிமை பெற்றுவிட்ட இராணுவத்தின் செயற்பாட்டிற்கும், பௌத்த பேரினவாத சிந்தனைக்கும் இவ் அணுகுமுறையானது முரண்பாடானதாகும்.

இந்நிலையில் தான், செய்து கொண்ட உடன்பாட்டை நிறைவேற்றுவது குறித்து சிறிலங்கா அரசு குழப்பமடைய நேரிட்டுள்ளது. பொருளாதாரத் தடையைத் தளர்த்துவதென்பது யுத்தம் குறித்த முழுத் தந்திரோபாயத்தையும் மாற்றுவதாக அமையும் என்ற இராணுவத்தின் நிலைப்பாட்டை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இருப்பினும், புலிகளின் காவலிலுள்ள 35 கைதிகளினதும் விடுதலை என்பது இராணுவ ரீதியான அணுகுமுறைக்கு அப்பாற்பட்டது என்பதை அரசு நன்கு அறியும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தமிழக நிலைமைகளை ஆராய

### பாதுகாப்பு அமைச்சர் சென்னை விரைவு

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து மாநில அரசுடன் ஆலோசனை நடத்துவதற்கென இந்திய மத்திய உள்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜேஸ் பயிலட் இன்று சென்னை வருகின்றார்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மற்றும் உள்துறை காவல்துறை அதிகாரிளுடன் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைவரம்குறித்து அவர் விவாதிப்பார் என்று தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மிதிவெடியை

தெரியவருவதாவது, உடுத்துறை தரவை எனும் இடத்தின் பரவை கடற் பகுதியில் கௌதாரிப் பறவை பிடிப்பதற்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்லன் சதீஸ் (வயது 15) இவரது சகோதரன் சுரேஸ் (வயது 10) பொன்னுச்சாமி பிரேமதாஸ் (வயது 12) ஆகியோர் அப்பகுதிக்கு சென்றுள்ளனர். அங்கு கரையோரமாக காணப்பட்ட மிதிவெடி ஒன்றை கண்டெடுத்த சதீஸ் அதனை அழுக்கிய போது அது வெடித்ததில் உடல் சிதறிப் பலியானார். இவருக்கு அருகில் நின்ற சுரேஸ், பிரேமதாஸ் ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்களில் பிரேமதாஸ் என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கேரதீவு

கலஸ் அதன் கொழும்பு தலைமையக பிரதிநிதி யூசுப்கான் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமார் ஆகியோர் இறங்குதுறையை நேரில் சென்று பார்வையிட்டனர்

நேற்றுக் காலை 10.00 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளால் பூரண பாதுகாப்புடன் மேற்படி பிரதிநிதிகள் கேரதீவு பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கேரதீவு இறங்குதுறையில் முன்னர் பாவனையில் இருந்த பத்து தொன் நிறையுள்ள பொருள்களை இறக்கி ஏற்றக் கூடிய இரண்டு பாஜ்களும் பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதமடைந்துள்ளன. இவற்றில் ஒன்று கேரதீவு கரையோரத்தை அண்டியும், மற்றையது பாதையின் நடுவில் கடலில் கைவிடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. கேரதீவு இறங்குதுறையை அண்டியிருந்த கட்டடங்கள் அனைத்தும் சிறிலங்கா விமானப்படை விமானங்களின் குண்டுவீச்சுக்கு இலக்காகித் தரைமட்டமாகிக்கிடக்கின்றன. பாதை இடையிடையே விமானக் குண்டுகளின் தாக்குதல்களால் பலத்த சேதமடைந்து காணப்படுகின்றது.

மேற்படி பகுதியை சுமார் ஒருமணி நேரம்வரை பார்வையிட்டபின் பிரதிநிதிகள் அங்கிருந்து மீண்டும் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர்.

ஐ. நா. பிரதிநிதிகள் இன்று நண்பகல் கொழும்பு திரும்புகின்றனர்.

சமூகம் தரவும்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு நடைபெறும். பேரவை உறுப்பினர் அனைவரும் சமுகம் தருமாறு வேண்டப் பெறுகின்றனர்.

### உற்சவம்

நல்லூர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறும்.

இறுதி நாளான 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் சங்காபிஷேகமும், மாலை அம்பாள் வீதியுலாவும் நடைபெறும்.

கைதிகள்

பிரிவினர் இதை கடுமையாக ஆட்சேபித்தனர் என்றும் இதனால் இம்முயற்சி பிசுபிசுத்து விட்டதாகவும் சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் செய்தி வெளியிட்டமை நினைவிருக்கலாம்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியுள்ள போர்க்கைதிகளின் உறவினர்களை மீண்டும் கொழும்பிற்கு அழைத்துவருவது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பொறுப்பே என பிரிகேடியர் அங்கமன மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஒலிப்பதிவு

லைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீடும், கலைஞர்களைக் கௌரவித்தல் நிகழ்வும் இடம் பெறுவதுடன் 'கரும்புலிகள்' பாடல் ஒலிப்பதிவு நாடாவின் மதிப்புரைகளும் இடம்பெறும்.

ஆயர்

த்து மதத்தலைவர்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பின் ஓர் அங்கமாகவே அங்கிலிக்கன் ஆயருடனான சந்திப்பும் அமைந்ததாக ரூபவாஹினி தெரிவித்தது இச்சந்திப்பில் கொழும்பு பிரதி மேற்றாணியார் வீரசூரியாவும் கலந்து கொண்டார்.

### மரண அறிவித்தல்

### திருமதி விஜயலட்சுமி சத்தியமூர்த்திக்குருக்கள்

இணுவில் கந்தசுவாமி கோவிலடியைச் சேர்ந்த திருமதி விஜயலட்சுமி சத்தியமூர்த்திக் குருக்கள் நேற்றுக் காலமானார். இவர் சத்தியமூர்த்திக் குருக்களின் அன்பு மனைவியும், ராஜமோகன், மனோசங்கர், சாந்தினி, ரவிச்சந்திரன், ராஜேஸ்வரி, மணிவண்ணன், சுதர்சனன், வரதராஜன், மாதவன், சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணமூர்த்தி, பரமேஸ்வரி, நகுலேஸ்வரி, சௌந்தரி ஆகியோரின் அன்பு மாமியாரும், பார்த்தீபன், சரண்யா, கோபி, மதி ஆகியோரின் பாட்டியும், காலஞ்சென்ற ஆனந்தநாராயணஐயர், யோகாம்பாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமநாதக்குருக்கள், இராசம்மாள் ஆகியோரின் அன்பு மருமகளும், பாலசுந்தர சர்மா, ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கந்தசுவாமி கோவிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
சுதர்சனன்

(5260)